விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 263 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 23 திங்கட்கிழமை (08.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## ஐ.நா கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்

### இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், இன்றைய தினமே ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கை பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)



## ஜெனிவா பயணமானார் அமைச்சர் விஜித ஹேரத்

### சிறப்பு அறிக்கை வெளியிடவுள்ளார்

(கொழும்பு)

வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சர் விஜித ஹேரத் 15ஆம் பக்கம் பார்க்க

## சர்வதேச தலையீடு இலங்கைக்குத் தேவையில்லை

### யாழில் ரில்வின் சில்வா

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தலையீடு இலங்கைக்குத் தேவையில்லை. எங்களுடைய பிரச்சினையை நாங்கள் நாட்டுக்குக்குள்ளேயே 02ஆம் பக்கம் பார்க்க

### - வெள்ளைக் கொடி விவகாரம் உட்பட -

# மனித உரிமை குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் விசாரிக்கப்படும்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய விசேட செவ்வி

(கொழும்பு)

- உள்ளக விசாரணைகளின் பொறுப்பாளராக சர்வதேசம் இருக்க முடியாது.
- உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாததாலேயே ஜெனிவா நெருக்கடி வலுப்பெற்றுள்ளது.
- காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
- ஜெனிவா சக்கரத்திலிருந்து வெளிவர வேண்டும்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## எல்லை நிர்ணயம் முடிந்ததும் மாகாண சபைத் தேர்தல்

### மனித உரிமைகள் ஆணையாளருக்கு அநுர அரசு அறிவிப்பு

(கொழும்பு)

எல்லை நிர்ணய செயன்முறை முடிந்ததும், மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படும் என்று இலங்கை அரசாங்கம் ஜெனிவா மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்துக்கு அறிவித்துள்ளது.

16ஆம் பக்கம் பார்க்க

### செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிபுணத்துவத்தை கோரத் தீர்மானம்?


(கொழும்பு)

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரத்தில் அகழ்வு மற்றும் பகுப்பாய்வு நடவடிக்கைகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிபுணத்துவத்தைக்கோரி அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்திருப்பதாகவும் அதற்கமைய இச்செயன்முறையில் செஞ்சிலுவைச் சங்கம் வெகுவிரைவில் பங்கேற்கும் எனவும் அறியமுடிகிறது.

செம்மணி மனிதப் புதை 02ஆம் பக்கம் பார்க்க

## கிருசாந்தியின் மரணம் இன அழிப்புக்கான சாட்சி

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சிங்கள பௌத்த பேரினவாதிகளால் இந்த மண்ணில் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு கிருசாந்தியினுடைய 15ஆம் பக்கம் பார்க்க

### சுன்னாகத்தில்

## 21 நாட்களான குழந்தை உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தாய்ப்பால் குடித்துவிட்டு உறங்கிய 21 நாட்களேயான ஆண் 15ஆம் பக்கம் பார்க்க

## தையிட்டி விகாரையை அகற்றக்கோரி போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமை...

ஐ.நா. கூட்டத் தொடர் இன்று ஆரம் பமாகவுள்ள நிலையில் ஊடகங்களு க்கு அவர் வழங்கிய விசேட செவ்வி யிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், உண்மையிலேயே உறுதிமொழி கள் நிறைவேற்றப்படாமையினால் தான் ஜெனிவா குற்றச்சாட்டுக்களும் நெருக்கடிகளும் வலுப்பெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்குச் சென்று, வெறும் அறிக் கைகளை சமர்பித்து வந்துள்ளார்களே தவிர அங்கு வழங்கும் உறுதிமொழி களை உள்நாட்டில் நிறைவேற்று வதில் ஆர்வம் செலுத்தவில்லை. ஜெனிவாவில் மனித உரிமைகள் அமர் வுகள் நடக்கும் போது இலங்கையிலி ருந்து செல்லும் தரப்பு அறிக்கையைச் சமர்பித்து விட்டு நாடு திரும்பியதும் அதனை மறந்து விடுகின்றனர்.

மறுபடியும் ஜெனிவா அமர்வுகள் ஆரம்பிக்கும் போது தான் வழங்கிய உறுதிமொழிகளும் அறிக்கையும் அவர்களின் நினைவுக்கு வருகிறது. இதுவரை காலமும் இவ்வாறானதொரு நிலைமையே நாட்டில் இருந்துள்ளது.

சர்வதேசத்துடன் தொடர்புப்பட்ட விடயங்களாக இவற்றைக் கருதும் போது இதுவொரு தவறான அணுகு முறையாகும். ஜெனிவா மனித உரிமை கள் விடயத்தில் வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றுவது, கொள்கை ரீதியாக செயற்படுவது என் பது தொடர்பில் அரசாங்கம் ஏற்கனவே தீர்மானங்களை எடுத்துள்ளது.

உதாரணமாக செம்மணி மனிதப் புதைக்குழி உட்பட பல சம்பவங்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. ஊடகங்களை அழைத் துச்சென்று அந்த விசாரணைகளை பிர சாரம் செய்ய வேண்டிய தேவை யில்லை. மறுபுறம் வலிந்து காணாம லாக்கப்பட்டவர்களின் விசாரணை களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எந்தவொரு விசாரணைக்கும் அர சாங்கம் தடையாக இருக்கவில்லை என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். மனித உரிமைகள் சார்ந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஆதா ரங்கள் இருப்பின் முறைப்பாடு செய்ய லாம். சுயாதீனமான விசாரணைகள் முன்னெடுக்கப்படும். ஆகவே யாரை யும் பாதுகாப்பதற்காக அரசாங்கம் கடமைப்பட்டிலில்லை.

அது மாத்திரமன்றி ஜெனிவா குற் றச்சாட்டுகளுக்கு அப்பால் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதே அரசாங்கத்தின் முதன்மையான கட மையாகவுள்ளது. எனவே ஜெனிவா சக்கரத்தில் இருந்து முதலில் வெளி வர வேண்டும். பொறுப்புக்கூறல் விசாரணகளை முன்னெடுப்பது ஐக் கிய நாடுகள் மனித உரிமை பேர வையை திருப்திப்படுத்துவதற்கா கவோ அல்லது மகிழ்விப்பதற்கா கவோ அல்ல.

மாறாக எமக்கு வாக்களித்த மற்றும் வாக்களிக்காத மக்களின் பிரச்சினை களைத் தீர்ப்பதற்கே கடமைப்பட்டுள் ளோம். விசேடமாக இந்த அரசாங்கம் அவர்களுக்குரியது என்பதை பாதிக் கப்பட்ட மக்கள் உணர வேண்டும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத் தின் கீழ் அனைத்து விசாரணைகளும் முன்னெடுக்கப்படும். இதுவே எமது நிலைப்பாடாகும்.

ஆனால் இதுவரை காலமும் அந்த விசாரணைகள் இடம்பெறவில்லை என்பது வேறு ஒரு விடயமாகும். செம் மணி மனிதப் புதைக்குழி மாத்திரம் அல்ல. வேறு பல மனிதப் புதைக்குழி கள் குறித்து விசாரணைகள் இடம் பெறுகின்றன.

இந்த விசாரணைகள் ஊடாக பக் கச்சார்பின்றி நேர்மையாக அரசாங்கத் தினால் செயற்பட முடியும் என்பதனை யும் எந்தவொரு விசாரணையையும் முன்னெடுக்க முடியும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளோம்.

இந்த விசாரணைகளுக்கு தேவை யான தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை தேவைக்கு ஏற்ப சர்வதேசத்திடமி ருந்து பெற்றுக்கொள்ள முடியும். ஆனால் விசாரணைப் பொறிமுறை க்கு பொறுப்பானவர்களாக இலங்கை இருக்க வேண்டும். மாறாக அந்தப் பொறுப்பில் சர்வதேசம் இருக்க வேண் டும் என்ற நிலைப்பாட்டை நாங்கள் நிராகரிக்கின்றோம்.

எனவே ஜெனிவா குற்றச்சாட்டுக் களில் நிபுணத்துவ ஒத்துழைப்புகளை சர்வதேசத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளவும் வெளிப்படைத்தன்மைய டன் செயற்படவும்தயாராகவே வுள்ளோம்.

ஆனால் விசாரணைகளின் பொறுப் பாளர்களாக இலங்கை இருக்கும். வெள்ளைக்கொடி மாத்திரமல்ல முன் னெடுக்கப்பட வேண்டிய எந்தவொரு விசாரணைகளுக்கும் அரசாங்கம் தடையாக இருக்காது எனத் தெரிவித் தார். (ம-7)

## சர்வதேச தலையீடு...

தீர்த்துக் கொள்வோம் என மக்கள் விடு தலை முன்னணியின் பொதுச் செயலா ளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடக வியலாளர்களைச் சந்தித்தபோது வடக் குக் கிழக்கிலே தமிழ்த் தேசியக் கட் சிகள் ஒன்றிணைந்து இனப்படு கொலைக்கு சர்வதேச நீதிகோரி கையெழுத்துப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன. அதனை நீங்கள் எவ்வாறு நோக்குகின்றீர்கள் என ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், முன்னைய அரசாங்கங்கள் போர்க்குற்றங்களில் ஈடுபட்டிருந்தமை யால் அவர்கள் விசாரணைகள் தொடர் பில் கரிசனை கொள்ளவில்லை. ஏனெனில் குற்றம் செய்தவர்கள் தீர்வை வழங்கமாட்டார்கள்.

ஆனால் தற்போதுள்ளது மக்க ளாட்சி. மக்களுக்கு நியாயத்தை வழங்குவது எமது பொறுப்பாக உள் ளது.

எனவே இலங்கை சட்டத்தின் பிரகாரம் நியாயமான விசாரணை களை முன்னெடுக்க நாம் தயாராக வுள்ளோம். அதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. சர்வதேச விசாரணையும் அவசியம் இல்லை என்றார். (ம-7)

## சர்வதேச...

குழி விவகாரத்தைப் பொறுத்தமட்டில் அகழ்வுப்பணிகளை முன்னெடுப் பதற்கு அவசியமான நிதியைப் பெற் றுக்கொடுத்தல், கண்காணிப்பு மற்றும் ஆவணப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட விடயங் களில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் அதன் பங்களிப்பினை வழங்கிவருகிறது.

அதுமாத்திரமன்றி செம்மணி மனிதப்புதைகுழி விவகாரம் தொடர் பில் அண்மையில் முக்கிய வெளிப் படுத்தல்களைச் செய்திருந்த மரண தண்டனைக்கைதி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை சிறைச்சா லைக்குச் சென்று சந்தித்த காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தினர், அவரிடம் விடயங்களைக் கேட்ட றிந்துகொண்டனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் மனிதப்புதைகுழிகள் விவகாரத்தைக் கையாள்வதில் சர்வதேச செஞ்சி லுவைச் சங்கத்துக்கு நீண்டகால அனுபவமும்முறையான நிபுணத்துவ மும் உள்ள போதிலும் அரசாங்கம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கட் டமைப்புக்களால் உத்தியோகபூர்வமாக அழைப்புவிடுக்கப்படாததன் காரண மாக குறிப்பாக செம்மணி மனிதப்பு தைகுழி விவகாரத்தில் செஞ்சிலுவைச் சங்கம் பங்கேற்கவில்லை.

இந்நிலையில் அண்மையில் செம் மணி மனிதப்புதைகுழி விவகாரத்தில் அகழ்வு மற்றும் பகுப்பாய்வு நடவடி க்கைகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிபுணத்துவத்தைக்கோரி காணாமல்போனோர் பற்றிய அலு வலகத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக நீதியமைச்சினால் உத்தி யோகபூர்வமாக அழைப்புவிடுக்கப் பட்டிருப்பதாக அறியமுடிகிறது. அது மாத்திரமன்றி மேற்படி வேண்டுகோ ளுக்கு இணங்க, இச்செயல்முறையில் வெகுவிரைவில் செஞ்சிலுவைச் சங்கம் பங்கேற்கும் எனவும் நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)


## பொதுச்சபைக்கூட்டம் 2025

காலம் : 14.09.2025
நேரம் : மு.ப 10.30மணி
இடம் : கரவெட்டிப்பிரதேச கால்நடை வைத்தியநிலையம்

**தலைவர்**
திரு.பு.இராதாகிருஸ்ணன்


**பிரதம விருந்தினர்**
திரு.கிறகோரி.சந்திரசேகரன்
(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

**சிறப்பு விருந்தினர்கள்**
Dr.S.சுகிர்தன்(கால்நடை வைத்திய அதிகாரி)
திருமதி.பி.சுகிர்தா (கூ.அ.உத்தியோகத்தர்)
திரு.சி.சிவாலன் (கூ.அ.உத்தியோகத்தர்–2021ம் ஆண்டு கணக்காய்வாளர்)
திரு.சோ.தங்கேஸ்வரன் (கூ.அ.உத்தியோகத்தர்–2021ம் ஆண்டு கணக்காய்வாளர்)
திரு.அ.சஞ்சயன் (கூ.அ.உத்தியோகத்தர்–2022ம் ஆண்டு கணக்காய்வாளர்)
திரு.வொ.கோகுலன் (கூ.அ.உத்தியோகத்தர்–2023ம் ஆண்டு கணக்காய்வாளர்)
திருமதி சி.பிருந்தா (கூ.அ.உத்தியோகத்தர்–2023ம் ஆண்டு கணக்காய்வாளர்)

நிகழ்ச்சி நிரல்
மௌன இறைவணக்கம்
மங்கள விளக்கேற்றல்
1. நிகழ்ச்சிநிரல் அங்கீகரித்தல்
2. தலைமையுரை
3. சென்ற பொதுச்சபைக்கூட்ட அறிக்கை சமர்ப்பித்தல்
4. எண்பார்வை அறிக்கை சமர்ப்பித்தல் (2021,2022,2023)
5. உத்தேச வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பித்தல் (2026)
6. பிரேரணைகள்
   1. பொதுச்சபைப்பிரதிநிதிகளின் பிரேரணைகள்
   2. இயக்குனர்சபையினரின் பிரேரணைகள்
7. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் உரை
8. கடிதங்கள்
   1. திணைக்களம்
   2. பொது
9.நன்றியுரை

குறிப்பு:- இத்துடன் நிதி நிலவரக்கூற்று, வருமானவிபரக்கூற்று, கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரின் மீளாய்வு அறிக்கை என்பன இணைக்கப்பட்டுள்ளது. இம் மேற் குறிப்பிட்ட கணக்கறிக்கை தொடர்பான மேலதிக விரிவான விபரங்களினை அலுவலகக் கடமைநாட்களில் பார்வையிட முடியும். எமது சங்கத்தின் அனைத்துக் கிளை நிலையங் களிலும் கணக்காய்வுச் சுருக்க அறிக்கையானது பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

தலைவர்
திரு.பு.இராதாகிருஸ்ணன்
(C-3823)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 ஆம் ஆண்டு கண்ணீர் நினைவலைகள்

## அமரர். சண்முகநாதன் சந்துதன்


**மண்மகிழ 07.02.2000 | விண்நெகிழ 08.09.2009**



அன்புச் செல்லமே சந்து அண்ணா!
அன்பின் திருவுருவாய் அவதரித்த திருமகன் நீர் அன்புடனும்
பாசத்துடனும் எம்மை மகிழ்வித்து பாதியிலே துன்பச் சுமைதனை
தந்து சென்றீரே பாசத்தின் உருவாய் அன்பின் ஊற்றாய்
உறவுகளின் செல்லப் பிள்ளையாய் வலம் வந்தீர் குடும்பத்தின்
ஒளி விளக்காய் பெற்றோரை மகிழ்வித்து ஒன்பது ஆண்டுகள்
வாழ்ந்திருந்தீர் ஏனோ கடவுளுக்குப் பொறுக்கவில்லை தம் பாதம்
உம்மை அரவணைத்துவிட்டார்.
ஒளிவு மறைவில்லா உம் பேச்சு புன்னகைத்த உம் திருமுகம்
எப்போ கேட்போம், பார்ப்போம் உங்களுடன் கூடி வாழ முடியாத
ஏக்கம் எம்மை வாட்டி வதைக்குதே அண்ணா!
ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டார்!
வருவாரோ இம் மானிலத்தே! அதனால் தான் என்னவோ
அம்மாவும் அப்பாவும் உம் இடம் நாடி வந்தனரோ?
எம்மை தவிக்கவிட்டு! உங்கள் மூவரது பிரிவும் எம்மால்
தாங்கமுடியவில்லை. நெஞ்சம் மறப்பதில்லை அதில் உங்கள்
மூவர் நினைவுகளும் என்றும் மறையாது நிலைத்து நிற்கும் நாம்
இருக்கும் வரை உங்கள் அன்பை மறவோம் என்றும்- அதனால்
தான் உங்கள் துயிலிடம் நாடி நாம் சென்று வருகின்றோம்.
எப்போதாவது ஒருதடவை உங்களை காண மாட்டோமா என
எண்ணி தேடுகிறோம்... அண்ணா உம் வரவை எண்ணி...
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!





"சண்முகநாதம்"
கட்டைப்பாலி லேன்,
ஆனைக்கோட்டை.

உங்கள் பிரிவால் வாடும்
அன்புச்சகோதரர்கள்- தேவசந்துதன்,
தேவசாத்வீகன், நம் உறவுகள்.

(1526)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## அல்வாய் ஒன்றிய வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது மனோகரா அணி

**சுவிட்ஸ்லாந்து அல்வாய் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 8 ஆவது விளையாட்டு விழா இறுதி நிகழ்வும் இறுதி உதைப்பந்தாட்ட போட்டியும் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் மாலைசந்தை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது. இதன் போது நடைபெற்ற உதைபந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டியில் 4:2 என்ற கோல் கணக்கில் அல்வாய் நண்பர்கள் அணியை வீழ்த்தி அல்வாய் மனோகரா அணி சம்பியனாகியது.**



வடமராட்சியின் பலம் பொருந்திய அணிகளான அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதிய உதைப் பந்தாட்டத் தொடரில் முதல்பாதி ஆட்டத்தில் மனோகராவின் வீரர்களான சுயாந் 2 கோல்களும், அச்சா 1 கோலும் போட்டு ஆட்டத்தின் முதற்பாதி முடிவில் 3:0 என்ற அடிப்படையில் அல்வாய் நண்பர்கள் அணியை நிலைகுலையச் செய்தார்கள்.

ஆட்டத்தின் இரண்டாம் பாதி தொடங்கியதும் அல்வாய் நண்பர்கள் அணி தாமும் சளைத்தவர்கள் அல்ல என்பதனை நிரூபிக்கும் முகமாக மனோகரா அணிக்கு எதிராக தொடர்ந்து 2 கோல்களை போட்டனர்.

ஆட்டத்தின் முடிவில் மீண்டும் மனோகரா அணி தன்னுடைய பலத்தை நிரூபிக்குமுகமாக மனோகராவின் வீரன் சுயாந் அல்வாய் நண்பர் அணிக்கு எதிராக மீண்டும் ஒரு கோலைப்போட்டார்.

இறுதியில் 4:2 என்ற அடிப்படையில் மனோகரா அணி தன்னுடைய பலத்தை நிரூபித்து அல்வாய் நண்பர்கள் அணியை வீழ்த்தி இரண்டாவது தடவையாக அல்வாய் ஒன்றிய வெற்றிக்கிண்ணத்தினை சுவீகரித்துக் கொண்டது.

ஆட்ட நாயகனாக மனோகரா அணியின் சுயாந் மற்றும் சிறந்த கோல்காப்பாளராக மனோகரா அணியின் பிரதீஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (3)

## 2ஆவது ரி-20 போட்டியில் இலங்கையை வீழ்த்தியது ஜிம்பாப்வே

இலங்கை - ஜிம்பாப்வே கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரின் 2ஆவது போட்டி ஹராரே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற ஜிம்பாப்வே அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி ஆரம்பம் முதலே ஜிம்பாப்வே பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் திணறியது.

இதில் அதிகபட்சமாக, கமில் மிஸ்ரா (20 ஓட்டங்கள்), சரித் அசலன்கா (18 ஓட்டங்கள்) மற்றும் தசுன் ஷனகா (15 ஓட்டங்கள்) தவிர வேறு எந்த துடுப்பாட்ட வீரரும் இரட்டை இலக்கை தொடவில்லை.


17.4 ஓவர்கள் தாக்குப்பிடித்த இலங்கை அணி 80 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.


அபாரமாக பந்துவீசிய ஜிம்பாப்வே தரப்பில் பிராட் எவன்ஸ் மற்றும் சிக்கந்தர் ராசா தலா 3 விக்கெட்டுகளும், முசரபானி 2 விக்கெட்டுகளும் வீழ்த்தி அசத்தினர்.

இதனையடுத்து 81 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி ஜிம்பாப்வே களமிறங்கியது. இந்நிலையில், ஜிம்பாப்வே அணி 14.2 ஓவரில் 5 விக்கெட் இழப்பிற்கு 84 ஓட்டங்களை எடுத்து வெற்றிப் பெற்றது.

இதில், அதிகபட்சமாக டஷிங்கா முசேகிவா 21 ஓட்டங்களும், ரியான் பர்ல் 20 ஓட்டங்களும் எடுத்து இருவரும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். தொடர்ந்து, பிரெயின் பென்னட் 19 ஓட்டகளும், தடிவானாஷே மருமணி 17 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

துஷ்மந்தா சமீரா அதிகபட்சமாக 3 விக்கெட்டுகளை வீழ்த்தி யிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)





இணுவில் பொது நூலக சிறுவர் திறன்விருத்தி மைய மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வானது நேற்று முன்தினம் சனிக்கிழமை இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. (படம்:- கஜிந்தன்)




தென்மராட்சி வளர்மதி விளையாட்டுக்கழகம் நடத்திய தென்மராட்சி ரீதியான லீக் முறையிலான தாச்சி சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியில் நாவற்குழி சரஸ்வதி அணியை எதிர்த்து கைதடி குமரநகர் அணி மோதியது. இறுதியில் 6.4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைதடி குமரநகர் அணி வெற்றி பெற்றுள்ளது. (படம்:- சுபேசன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை நட்பு நாடுகள் எதிர்க்க வேண்டும்

## வெளிவிவகார அமைச்சர் வேண்டுகோள்

**(கொழும்பு)........ ஐ.நா. கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்படுமாயின் அதற்கு எதிராக அனைத்து நாடுகளும் செயற்பட வேண்டும் என அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ள நிலையிலேயே அரசாங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழு ஜெனீவாவில் முகாமிட்டுள்ள நிலையில் பிரித்தானியா, கனடா, மலாவி, மொன்டினீக்ரோ மற்றும் வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகளால் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றவுள்ளதாக தெரிய வருகிறது.

அவ்வாறு கொண்டு வரப்படும் தீர்மானம் ஏற்கனவே உள்ள தீர்மானங்களை விட வலுக்குறைந்ததாகவே இருக்கும் எனவும் இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

ஜெனிவா விடயத்தை மையப்படுத்தி இலங்கையின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தும் வகையில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் பன்னாட்டு இராஜதந்திரிகளை சந்தித்து கலந்துரையாடி இருந்தார்.

இதன் போது அனைத்து இன மக்கள் வாழும் பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் வெற்றிப்பெற்றுள்ளது.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் என அனைத்து சிறுபான்மை இன மக்களின் நம்பிக்கையை வெற்றி கொண்ட அரசாங்கமாகவே இலங்கையின் தற்போதைய ஆட்சி உள்ளது.

அனைத்து இன மக்களின் பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம் என்பவற்றை உறுதி செய்வதில் முழுவதுமாக ஈடுபாட்டுடன் தீர்மானங்களை எடுத்து வருகின்றோம்.

இதன் பிரகாரம் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டம் என்பவற்றை இரத்து செய்வதற்கும் தீர்மானம் எடுத்துள்ளதாக குறிப்பிட்டார்.

கடந்த 11 மாதங்களாக எவ்வித பாரதூரமான மனித உரிமைகள் மீறல்களும் நாட்டில் இடம்பெறவில்லை.

எனவே இலங்கைக்கு எதிராக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்படுமாயின், அதற்கு எதிராக நட்பு நாடுகள் செயற்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க கனிவுகாட்டும் ஐ.நா.

(கொழும்பு)

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில், நீண்டகாலமாக நிலவும் காணி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை, இலங்கை அரசாங்கத்திற்கு உதவவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


இதற்காக ஒரு புதிய திட்டத்தை ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

மோதல் முடிவடைந்து பதினாறு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையிலும் ஏராளமான பொது மக்களின் காணி உரிமைகோரல்கள் தீர்க்கப்படாமல் உள்ளன.

இந்தநிலையில், விவசாய அமைச்சின் கீழ் உள்ள அரச நிறுவனங்களுடன் தாம் ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களை நடத்தி வருவதாக, ஐக்கிய நாடுகளின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆண்ட்ரே ஃபிராஞ்ச் தெரிவித்துள்ளார். (க-8)

# மாகாணசபைத் தேர்தலை நடத்த மனப்பூர்வமாக உள்ளோம்

## மனம் திறந்தது தேர்தல் திணைக்களம்



(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சுடன் கலந்துரையாட உத்தேசித்துள்ளதாகவும் இது தொடர்பில் சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடவுள்ளோமெனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.மாகாண சபைத் தேர்தல்குறித்து வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,மாகாண சபைத் தேர்தல் விரைவாக நடத்தப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். சுதந்திரமானதும், நீதியானதுமான முறையில் தேர்தலை நடத்துவற்குரிய சாதகமான சூழலை ஏற்படுத்திக் கொடுத்தால் தேர்தலை நடத்துவோம்.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அடுத்தடுத்து நடத்தினோம்.

சட்ட சிக்கலினால் தான் மாகாண சபைத் தேர்தல் கால வரையின்றி பிற்போடப்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு கடந்த கால அரசாங்கங்கள் மேற்கொண்ட சகல முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கியுள்ளோம். அதேபோன்று தேர்தல் முறைமை தொடர்பிலும் பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளோம்.

தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம். சகல தரப்பினரும் பிரதிநிதித்துவம் கொள்ளும் வகையில் தேர்தல் முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளோம்.

இவ்விடயம் தொடர்பில் சகல தரப்பினருடனும் வெளிப்படைத்தன்மையுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட தயாராகவுள்ளோம் என அவர் சுட்டிக்காட்டினார். (க-8)

# கனரக வாகனங்களுக்கு நேரக்கட்டுப்பாடு

(கொழும்பு)

பாடசாலை நாட்களில் காலை 6.30 மணி முதல் 7.45 மணி வரையிலும், காலை 11.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரையிலும் கனரக வாகனப் போக்குவரத்து நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

சில வாரங்களுக்கு முன்பு பாடசாலை வேன் மணல் டிப்பர் லொறியில் மோதி விபத்துக்குள்ளானது.

இதனை தொடர்ந்து நடை பெற்ற கலந்துரையாடல்களை தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அதன் பணிப்பாளர் நாயகம் தீபானி வீரக்கோன் தெரிவித்தார்.

அதற்கமைய, மேற் குறிப்பிட்ட நேரங்களில் கனரக வாகனங்கள் போக்குவரத்து நடவடிக்கைகளை மேற் கொள்ளும் வீதியில் கிடைக்கும் இடங்களில் நிறுத்தப்பட வேண்டும் என தீபானி வீரக்கோன் கூறினார். (க-8)

# மேலதிக ஒளி,ஒலி அமைப்பு வருகிறது புதிய சட்டம்

(கொழும்பு)

ஆபத்தான வகையில் மேலதிக பாகங்கள் பொருத்தப்பட்ட வாகனங்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என போக்குவரத்து பிரதியமைச்சர் வைத்தியர் பிரியந்த குணசேன தெரிவித்துள்ளார்.

பிரசன்ன குணசேன தமது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் குறித்த விடயத்தினை சுட்டிக்காட்டியுள்ளார்.

இன்று முதல் பல்வேறு ஒலிகளுடன், பல வண்ணங்களில் நின்று நின்று ஒளிரும் மின் விளக்குகளுடன் பயணிக்கும் வாகனங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை எல்ல-வெல்லவாய வீதியின் 24 ஆவது மைல்கல் அருகே எதிரே வந்த சொகுசு ஜீப்பின் பின்புறத்தில் பேருந்து மோதி, வீதியில் அமைக்கப்பட்டிருந்த பாதுகாப்பு இரும்பு வேலியை உடைத்து சுமார் 1000 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் 15 பேர் உயிரிழந்ததுடன் 13 பேர் படுகாயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த நிலையில் குறித்த விசேட அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ்லாந்து அரசியல் முறைமை தொடர்பில் ஆளும்- எதிர்க்கட்சியினருக்கு விசேட செயலமர்வு

(கொழும்பு)

இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினர்கள் 13 பேரை சுவிட்ஸர்லாந்துக்கு அழைத்துச் சென்று, அந்நாட்டின் கூட்டாட்சி அரசியல் முறைமை மற்றும் தேசிய ஒருமைப்பாடு வலுவாக்கம் என்பன பற்றி விளக்கமளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கும் அந் நாட்டு அரசாங்கம், அரசியல் மறு சீரமைப்பை மேற்கொள்வதற்கு உத்தேசித்திருக்கும் இலங்கைக்கு இந்நகர்வு பெரிதும் பயனுள்ளதாக அமையும் என நம்பிக்கை வெளி யிட்டுள்ளது.

எதிர்வரும் 2026 ஆம் ஆண் டுடன் இலங்கைக்கும் சுவிட்ஸர் லாந்துக்கும் இடையிலான இராஜ தந்திர உறவுகள் ஆரம்பமாகி 70 வருடங்கள் நிறைவடைகின்றன. அதனை முன்னிட்டு இலங்கை - சுவிட்ஸர்லாந்து பாராளுமன்ற நட்புறவு சங்கத்துடன் கூட்டிணை ந்து சுவிட்ஸர்லாந்து அரசாங்கம் மேற்படி செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளது.

இம்மாதம் 14 - 21 ஆம் திகதி வரை சுவிட்ஸர்லாந்தில் நடை பெறவுள்ள இச்செயலமர்வில் பங்கேற்பதற்கு இலங்கையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு அந்நாட்டின் வெளிவிவகாரங்க ளுக்கான கூட்டாட்சித் திணைக் களத்தின் சமாதானம் மற்றும் மனித உரிமைகள் பிரிவின் செய லாளரால் அழைப்புவிடுக்கப்பட் டுள்ளது.

இச்செயலமர்வானது சுவிட் ஸர்லாந்தின் அரசியல் முறை மையை ஆழமாகப் புரிந்து கொள்வதற்கும், ஆக்கபூர்வமான கலந்துரையாடல்களில் ஈடுபடு வதற்குமான வாய்ப்பை இலங்கை அரசியல்வாதிகளுக்கு வழங்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ள இலங்கைக்கான சுவிட்ஸர்லாந்து தூதுவர் சிரி வோல்ற், இலங்கை அரசியல் மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்கு உத்தேசித் திருக்கும் தற்போதைய சூழ் நிலையில் சுவிஸ் அரசியல் முறை மையின் முக்கிய கூறுகளை உள்வாங்குவதற்கும், பல்லின மற்றும் பன்மொழி சமூகங்களுக்கு மத்தியில் தேசிய ஒருமைப் பாட்டைக் கட்டியெழுப்புவது குறி த்து அறிந்துகொள்வதற்கும் இது உதவும் எனத் தெரிவித்துள் ளார். (க-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | சாவகச்சேரி | மருதனார்மடம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 300 | 200-300 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 250 | 180 |
| பச்சைமிளகாய் | 150 | 100 | 200 | 120 |
| தக்காளி | 150 | 120 | 150 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 200 | 230 |
| கோவா | 250 | 250 | 300 | 220 |
| கரட் | 300 | 350 | 400 | 260 |
| பூசணி | 50 | 100 | 50 | 50 |
| புடோல் | 150 | 200 | 200 | 100 |
| வாழைக்காய் | 100 | 120 | 150 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-350 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 190 | 200 | 150 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 350 |
| வெண்டக்காய் | 150 | 120 | 400 | 120 |
| கருணைக் கிழங்கு | 250 | 330 | 350 | 250 |
| பயற்றங்காய் | 300 | 350 | 300 | 350 |
| லீக்ஸ் | 300 | 250 | 200 | 180 |
| பீற்றூட் | 200 | 100 | 150 | 100 |
| கறிமிளகாய் | 300 | 450 | 300 | 250 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 280 |
| போஞ்சி | 350 | 700 | 600 | 350 |
| கத்தரிதம்புள்ள | 300 | 150 | 250 | -- |
| கீரை - 1 பிடி | 150 | 50-120 | 100 | 80 |
| தேசிக்காய் | 600 | 450 | 1200 | 400-650 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150-200 | 120-200 |
| இராசவள்ளி | 600 | 600 | 800 | 400 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 400 | 150 |
| முள்ளங்கி | 150 | 150 | 250 | 100 |
| பொன்னாங்காணி | 150 | 60 | 60 | 100 |
| வல்லாரை | 100 | 60 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 150 | 250 | 100 |

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்



## யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை

எஸ்.மதீஷன்- 167, கே.பிரணவன்-155, எஸ்.திலக்ஷன்-142, எஸ்.லக்ஷன்-137, யு.ஷத்வேக்-174, வி.நிதிஷன்-181, எ.சாருஹனன்-161, ஜெ.கோபிஷன்-161, பி.ஷருஷ்வின்-167, எம்.பிரவிந்-173, ஆர்.கனுசன்-142, ஆர்.டினோசன்-134, ரி.பவினஜா-147, எஸ்.கம்ஷிகா-158, கே.பவிரா-163, எஜ்.அக்ஷயா-158, எஸ்.ஹவேஷா-177, எம்.நிஷா-167, வி.அஸ்விதா-145, ஜெ.ஆரபி-150, ஆர்.விகாசி-135, எஸ்.சந்தோஷ்-144, யு.றோகின்-153, பி.ஷிவராமன்-150, ஜெ.காருண்யன்-167, எஸ்.அக்ஷயன்-156, எஸ்.கயலக்சன்-157, எ.அக்ஷயா-161, எஸ்.லக்ஷிகா-145, ரி.அனிஸ்கா-148, ரி.ஹரிணி-140, வி.வர்ஷனா-151, எ.மேதிரா-137, எஸ்.அனிகா-139, பி.டறுஷிகா-137, சி.ஹேஷவசன்ஜீவ்-139, எஸ்.மிதுசிகன் -161, எஸ்.மிதுரிகன்-136, எஸ்.மிர்திக்-178, என்.ஜஷிகன்-158, பி.அரணன்-138, ஆர்.றதீசன்-148, எம்.தாரகன்-166, எ.லக்ஷயன்-194, எஸ்.சாத்விகன்-137, கே.டஸ்மிதா-149, எஸ்.குஹபிரணவி-150, ரி.நிக்ஷஜா- 132, வி.கஜநிஷா-150, வி.லிர்ஷிகா-151, இ.சத்யகி-162, கே.அஸ்விதா-166, ஜி.சக்ஷிகா-133, எஸ்.ஜக்ஷனா-132, எஸ்.கனிஸ்ரிகா-143, எஸ்.அனுஸ்ரீ-148, கே.அருள்செல்வன்-168, ஜி.மனஷ்வினி-142, பி.கன்சிகா-140, கே.கிஷானா-179, எஸ்.சதுர்ஷா-159, எம்.ஆருத்ரா-170, கே.ஜனோஷா-132, கே.மதுஷிகா-170, யு.அனுஷ்டிகா-146, ரி.அக்ஷயா-159, வி.பவிஷ்ணு-153, ஆர்.ஜெயசிறிராம்-133, எஸ்.தேனுஷாந்-168, ரி.பிரின்ஷிகன்-141, ஆர்-கேஷிகன்-140, பி.லாவஜன்-144, கே.பிரதீஷ்-158, எம்.பிரஹஸ்தன்-166, ரி.புவிசிகன்-184, ஆர்.பவன்ஷ்விந்-165, எஸ்.வாசவி-146, ரி.அபிஷனா-135, சி.வைசாலி-147, எஸ்.வைஷாலி-143, எஸ்.சிறிநிதா-145, கே.மதினி-145, கே.ஆதுஷன்-152, ரி.ஆத்விக்-135, எ.அகிசன்-157, எம்.அபினாஷ்-159, ஆர். மிதுசன்-142, யு.தீபிகன்-138, யு.தேயோமயசர்மா-166, எஸ்.ஷஸ்ரிஹன்-142, எச்.ரஷ்மிகா-148, எஸ்.அட்ஷயா-151, எஸ்.கவிஸ்னா-137, ஜெ.ரித்விகா-144, ரி.ஷிவானி-148, எஸ்.அக்ஷரா-155, ரி.குந்தவை-150, எச்.பவஸ்ரீ- 135, ஜெ.இஷானிகா-137, எஸ்.ஷரபி-163, பி.சஷ்மிகா-152, வி.கஜீவன்-155, எஸ்.சம்ஜெர்வின்-147, எம்.சுபனன்-143, ஜி.தனன்ஜெய்-152, ரி.இசைந்தஜன்-136, எ.டீபக்சரண்-166, எம்.சகீர் அஹமெட்-170, ரி.அதீஷ்கர்-143, கே.கேஷவி-138, எஸ்.லிபிஷனி-148, எ.அக்ஷனா-132, ஆர்.பருனி-159, பி.தாட்சாயினி-162, எஸ்.சுவீக்ஷா-136, எஸ்.லோமிக்கா-142, பி.அக்ஷரா-155, ரி.மேனோஜா-135, கே.வரனிஹா-144, ஜெ.அக்ஷனா-141, ஜெ.ஆராதனா-143, ரி.ஹரிபிரவீன்-164, எ.அபினாஷ்-156, எஸ்.பிரமோத்சர்மா-143, என்.அபினாஷ்-139, கே.கஜரூபன்-136, எ.திரிஷாந்-140, எஸ்.கஜிந்த்-136, ஆர்.அக்ஷயன்-136, ஆர்.டனஹரிஷ்-141, எ.அஷ்டேவ்-167, ஜெ.தஷ்வின்-157, ரி.பவித்ரன்-169, ஆர்.ராகேஷ்-134, எஸ்.தரணிகா-144, எ.ஜஷ்வினி-142, ஜ.தன்ஷிகா-143,எஸ்.கேனுஜா-138, எஸ்.பிரதிக்சா-140, கே.மதுமிதா-160, பி.பிரடிஷா-158.

## வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி

ஆர்.ஜிருஷிகா- 158, வி.நந்திதா- 157, ஏ.துஷாரா- 168, எம்.ரசீனா- 145, எ.அரோனிகா ரேச்சல்- 189, பி.ஜஸ்மிகா- 166, என்.ரேஸ்னிகா- 141, பி.தீபிகா- 157, என்.ஜஸ்ணவி- 161, எல்.ஷாத்விகா- 152, கே.ஷிரானி- 167, எஸ்.தீபிக்கா- 138, எஸ்.திவித்தா- 146, ரி.ஹதேரேனி- 136, ஜி.தன்விகா- 137, எம்.கவிலயா- 162, ஜே.லிபிக்ஷா- 157, ரி.அபிலக்ஷி- 136, எஸ்.சர்வின்- 135, எ.ஜனுஷாந்த்-140, எ.ஜனிஷா மிசேல்- 147,இ.விஹாஷி- 156, வி.விதுனா- 146, ஆர். அக்ஷா- 157, எஸ்.ஜஸ்மியா- 150, எஸ்.அட்ஷரா- 137, எம்.பாத்திமா சம்ஹா- 154, பி.ரித்திசா- 153, கே.அனன்யா- 138, ரி.கைசிகா- 135, எம்.நவினேகா- 162, எஸ்.லிதுரேகா- 178, பி.ரித்திகா- 139, எம்.ஜியாசினி- 135, எஸ்.மோனிசா- 141, எம்.அக்ஷரா- 158, எஸ்.அருஜி- 153, பி.சஸ்விதா- 135, ஆர்.பிலுரா- 171, பி.றெஜிஸ்ரன்- 136, பி.டருன்- 136, ஏ.அவிடோன்- 143, ரி.கிருஷிகா வெரோனிக்கா- 162, ஜே.ஹிமான்சா- 139, ரி.அனன்ஜா- 137, எஸ்.சாம்பவி- 147, கே.ஷாத்விகா- 138, ஏ.ஆருத்ரா-132, ஜே.நேதுஷா- 139, எஸ்.தஸ்மி- 134, கே.டனிக்கா- 136, என்.ஷகிஹா- 146, எஸ்.விதுஷாலினி- 140, ரி.எம்.நேஹா- 138, ஏ.அக்ஷவி- 136, வி.தாஷ்வினா- 165, ரி.சக்ஷனா- 150, என்.ஜனஜன்- 145, ஜி.ரியான் ஹைவின்-143, ஜே.டவினா- 135, ரி.தனுஷிகா- 132, ரி.நியோலின் எலோரியா- 159, கே.யஷ்னிகா- 136, எஸ்.மொகிஷா- 135, இ.அபிஷிதா- 132, எஸ்.யதுஷனா- 170, ரி.லக்ஷிகா- 143, கே.தர்னிகா- 132, எ.அஷ்மிதா- 146, பி.பிரதிக்சா- 145, ரி.திருஷ்யா- 149, எல்.விஹாஸ்- 161, ஆர்.ரக்ஷிதன் 140, ரி.அஜின்- 145, ஏ.அஜய்- 158,ஐ.யஸ்வினி-140.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றுச் சிறப்பு மிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தத்திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை பக்தி பூர்வமாக இடம் பெற்றது.

# போதைக் கடத்தலில் அரசியல்வாதிகள் தட்டித் தூக்கத் தயாராகும் அரசு



(கொழும்பு) ..........

**போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இரசாயனங்களை கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கொள்கலன்களின் உரிமையாளர்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளின் புகைப்படங்கள் எமக்கு கிடைத்துள்ளன.**

இந்த அரசியல்வாதிகளே போதைப்பொருள் விநியோக சங்கிலியின் பின்னால் உள்ளனர்.

இது தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு அவர்கள் தராதரமின்றி சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என பொது மக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்தார்.

ஹோமகமவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில், போதைப்பொருள் தயாரிப்புக்கு பயன்படுத்தப்படும் இரசாயனங்களை கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்ட கொள்கலன்களின் உரிமையாளர்களுடன் தொடர்புடைய அரசியல்வாதிகளே இந்த புகைப் படங்களில் உள்ளனர்.

போதைப்பொருள் கடத்தல் காரர்கள், அவர்களுடன் தொடர்புடைய அரசியல் வாதிகள், பாதாள உலகக் குழுக்களுடன் தொடர் புடையவர்களை இனங்காண்பதற்கு சிறந்த சந்தர்ப்பம் உருவாகியுள்ளது.

துப்பாக்கிச்சூடுகள் இடம்பெறும் அந்த சந்தர்ப்பத்தில் சந்தேக நபர்களை கைது செய்ய முடியாவிட்டாலும், அதன் பின்னர் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் ஊடாக பெரும்பாலான சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளின் போது முதலில் விநியோக சங்கிலி இல்லாதொழிக்கப்பட வேண்டும். முப்படையினர் பொலிஸார் இணைந்து அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அந்த வகையில் போதைப்பொருள் தயாரிப்புக்கு தேவையான இரசாயன மூலப்பொருள் அடங்கிய கொள்கலன்கள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றின் உரிமையாளர்களுடன் உள்ள சில அரசியல்வாதிகளின் புகைப்படங்களும் வெளியாகியுள்ளன.

இது தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய தராதரமின்றி அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர். விசாரணைகளுக்காக சிலரைத் தேடும் போது அவர்கள் பட்டப் படிப்பிற்காக வெளிநாடு சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சிலர் சுகயீனமுற்று வெளிநாடுகளுக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது. யார் எங்கிருந்தாலும் சட்டம் முறையாக நடைமுறைப்படுத்தப்படும் என அவர் திட்டவட்டமாக தெரிவித்தார். (க-8)

## கிருசாந்தியின் 29 ஆவது ஆண்டு நினைவேந்தல்




(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தால் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட கிருசாந்தியின் 29 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை செம்மணிப் பகுதியில் நடைபெற்றது.

வடக்கு, கிழக்கு நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் [illegible] பெற்ற இந் நிகழ்வில் [illegible] கொலை செய்யப்பட்ட கிருசாந்தியின் மைத்துனன் சந்திரகாந்தன் மயூரன் மற்றும் உறவினர்கள் பொது மக்கள் எனப்பலர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

அத்தோடு "வாசலிலே கிருசாந்தி" எனும் செம்மொழி தொடர்பான கவிதை நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

மேலும் இந்த நினைவேந்தலில் தமிழரசு கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், எம்.கே. சிவாஜிலிங்கம், வலி.கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஸ், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் [illegible] னர். ([illegible]-033)

## பிரதேச பண்பாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனு சரணையுடன் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலகமும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச பண்பாட்டுப் பேரவையும் இணைந்து நடத்தும் பிர தேச பண்பாட்டு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வின் போது "கலை ஞான வாருதி", "கலை வாருதி" மற்றும் "இளங் கலைஞர்' ஆகிய விருதுகள் பெறும் கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (3)

## இணைய சேவை பாதிப்பு மைக்ரோ சொப்ட் நிறுவனம்

உலகளாவிய இணைய சேவை சீர்குலைந்துள்ளதாக மைக்ரோசொப்ட் நிறுவனம் தெரிவித்துள்ளது.

செங்கடலில் உள்ள பல சர்வதேச கேபிள்கள் துண்டிக்கப்பட்டு சேதமடைந்துள்ளமையே இவ்வாறு இணைய சேவையில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளமைக்கு காரணம் எனவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.


செங்கடல் வழியாக ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவுடன் ஐரோப்பாவை இணைக்கும் பல சர்வதேச ஆழ்கடல் கேபிள்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாக குறித்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இதன் விளைவாக, ஆசியா, ஐரோப்பா மற்றும் மத்திய கிழக்கு முழுவதும் பயனர்களுக்கு இணைய சேவைகளின் வேகம் குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 'அடிச்சாலும் புடிச்சாலும் நீயும் நானும் அண்ணன் தம்பிடா'
# ட்ரம்பின் பேச்சுக்கு டுவிட் விட்ட மோடி



(டில்லி)

அமெரிக்காவுடனான இந்தியாவின் நல்லுறவுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த முக்கியத்துவம் அளிப்பதாகவும், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்புடன் எப்போதும் வலுவான உறவை கொண்டுள்ளதாகவும் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மேலும், ரஷ்யாவிடம் எண்ணெய் கொள்வனவு செய்தல் தொடர்பாக, இந்தியா மீது அமெரிக்கா 50 சதவீத வரி விதித்துள்ளதால், இரு நாடுகளுக்கு இடையிலான உறவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அண்மையில் வோஷிங்டனில் பேசிய ட்ரம்ப், தான் எப்போதும் மோடியுடன் நண்பராக இருப்பேன் எனவும் அவர் ஒரு சிறந்த பிரதமர் எனவும், இந்தியாவும், அமெரிக்காவும் சிறப்பான உறவைக் கொண்டுள்ளன எனவும் எனவே கவலைப்பட ஒன்று மில்லை என்றும் கூறியிருந்தார். இந் நிலையில், ட்ரம்ப்பின் இந்தப் பேச்சுக்கு எக்ஸ் தளத்தில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி பதிலளித்திருந்தார்.

அதில், இந்தியாவும் அமெரிக்காவும் மிகவும் நேர்மறையான மற்றும் தொலைநோக்கு பார்வையுடைய நல்லுறவை கொண்டுள்ளன என அவர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# கூகுளுக்கு அபராதம் கொதிக்கும் ட்ரம்ப்




(வோஷிங்டன்)

பயநர்களின் தரவுகளை கூகுள் கண்காணிப்பதாக தொடரப்பட்ட வழக்கில், முப்பதாயிரம் கோடி ரூபாய் அபராதம் விதித்து ஐரோப்பிய ஒன்றியம் உத்தரவிட்டது. இதற்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடும் எதிர்ப்பு தெரிவித்து உள்ளார்.

உலகம் முழுவதும் மொபைல் போன்கள் பயன்பாடு அதிகரித்த வண்ணம் இருக்கிறது. தரவுகளை கூகுள் கண்காணிக்கிறது என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளது. இந்த குற்றச்சாட்டுகளை கூகுள் நிறுவனம் மறுப்பு தெரிவித்துள்ளது.

விளம்பர தொழில்நுட்ப சந்தையில் தனது ஆதிக்க நிலையை தவறாக பயன்படுத்தியதற்காக கூகுள் மீது ஐரோப்பிய ஒன்றியம் அபராதம் விதித்தது. இதனை எதிர்த்து கூகுள் நிறுவனம் மேல்முறையீடு செய்யப் போவதாக உறுதி அளித்துள்ளது. இதனால் ஐரோப்பிய ஒன்றியம் விதித்த அபராதத்தை எதிர்த்து மேல்முறையீடு செய்ய 60 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டு உள்ளது.

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது, ஐரோப்பிய ஒன்றியம் இன்று மற்றொரு சிறந்த அமெரிக்க நிறுவனமான கூகுளுக்கு 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் அபராதம் விதித்துள்ளது.

நாங்கள் இந்த பாரபட்சமான செயல்களை அனுமதிக்க மாட்டோம். கூகுள் கடந்த காலங்களில் 13 பில்லியன் டொலர்களை அபராதமாக செலுத்தி உள்ளது. அது எவ்வளவு பைத்தியக்காரத்தனமானது? இப்படி அபராதம் விதிப்பது, அவர்களுக்கு வருமானம் பெறுவதற்கான வழியாகிவிட்டது.

அமெரிக்க நிறுவனங்களுக்கு எதிரான இந்த நடைமுறையை ஐரோப்பிய ஒன்றியம் உடனடியாக நிறுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (க-8)

# "முத்தப்பூச்சி"
## புதியவகை நோய் அடையாளம்

(வோஷிங்டன்)

"டிரையடோமைன்" எனப்படும் முத்தப்பூச்சிபரப்பும், "சாகஸ்" நோய்க்கு, அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஒரு லட்சம் பேர் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

இந்த முத்தப்பூச்சிகள் மனிதர்களின் முகத்தில், குறிப்பாக உதடுகள் அல்லது கண்கள் அருகே கடிப்பதால், இதற்கு இந்த பெயர் வைத்து உள்ளனர். இந்தப் பூச்சிகள் கடிக்கும்போது, "ட்ரைபனோ சோமா க்ரூஸி" எனும் ஒரு வகை ஒட்டுண்ணியை பரப்பு கின்றன.

இந்த ஒட்டுண்ணி சாகஸ் நோயை ஏற்படுத்துகிறது. இது, இதய மற்றும் செரிமான அமைப்புகளை பாதிக்கும் ஒரு தீவிர நோயாகும்.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் இந்தப் பூச்சிகள் பரவலாகக்காணப்படுவதாகவும், இது பரப்பும் சாகஸ் நோய் ஆரம்பத்தில் அறிகுறிகளைக் காட்டாது. அதே சமயம் நீண்ட காலத்தில் உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் எனவும் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர். (க-8)

# ஹமா...
# காசாவி...
## மனிதாபிம...

(ஜெருசலேம்)

ஹமாஸ் அமை... சங்கற்பம் பூண்டு... கடும் தாக்குதலை ... எனவே காசவில் இ... வெளியேற வே... அறிவித்துள்ளது.

ஹமாஸை இலக்கு வைத்து காசாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதலில் அப்பாவிப் பொதுமக்கள் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டுவரும் நிலையில் காசாவிலிருந்து பொது மக்களை வெளியேறி அல் - மாவாசி பகுதியில் உள்ள மனிதாபிமான வலயத்திற்குச் செல்லுமாறு இஸ்ரேல் அறிவித்துள்ளது.

அங்கு பொது மக்களுக்கான மருத்துவமனைகள், உணவுப்

# பயங்கரவாதிகள் வெறியாட்டம் பறிபோனது 55 அப்பாவி உயிர்கள்



மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் புலம் பெயர்ந்த உள்நாட்டு அகதிகள் முகாமில் இருந்து தமது வீடுகளுக்குத் திரும்பிக் கொண்டிருந்தவர்கள் மீது மத பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 55 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

வடகிழக்குப் பகுதியில் உள்ள தாருல் ஜமா நகரில் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் ஐந்து இராணுவத்தினரும் உயிரிழந்ததாக பாதுகாப்பு அதிகாரிகள் கூறினர்.

மோட்டார் சைக்கிள்களில் வந்த பயங்கரவாதிகள் முகாம்களில் இருந்து திரும்பியவர்களை இலக்குவைத்து துப்பாக்கிகளால் சுட்டு, வீடுகளுக்கு தீ வைத்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

நைஜீரியாவில் செயற்பட்டு வரும் போகோ ஹராம் ஐஎஸ்டபிள்யுஏபி போன்ற பயங்கரவாதக் குழுக்கள் தங்கள் தாக்குதல்களை தொடர்ந்து நடத்திவருகின்றன. இத்தகைய சூழலில், பாதுகாப்பு கோரி முகாம்களில் வசித்துவந்த அகதிகளை அங்கிருந்து கிராமங்களுக்கு திருப்பி அனுப்ப அரசு முனைந்துள்ள நிலையிலேயே மேற்குறித்த கொடூரத் தாக்குதல் நடைபெற்றுள்ளது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாஸை அழிக்கப் போகின்றோம்

# ாவில் இருந்து வெளியேறுங்கள்

## தோபிமான வலயம் அமைத்ததாகவும் சுட்டிக்காட்டிய இஸ்ரேல்

**லேம்)**

**ல் அமைப்பை ஒழித்துக்கட்ட திட ம் பூண்டுள்ளோம். அதன்படி காசாவில் குதலை தொடுக்கத் திட்டமிட்டுள்ளோம். ாசவில் இருந்து மக்கள் அனைவரும் ற வேண்டும் என இஸ்ரேல் ுள்ளது.**



வத்து ள்ளும் மக்கள் சய்யப் காசா வெளி தியில் லயைத் ரேல் ... கான ணவுப்

பொருட்கள், தண்ணீர் விநியோகம் என்பன வழங்கப்படும் எனவும் இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பின் மையப் பகுதியாக காசா இருந்து வருவதனால் ஹமாஸை அழிக்க இஸ்ரேல் தீவிரம் காட்டிவருகிறது.

நேற்றும் காசாவின் அடுக்குமாடிக் கட்டடத்தை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதலில் 50 இற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் இறந்துள்ளனர்.

இந்நிலையில் இதுவரை இஸ்ரேலின் மிலேச்சத்தனமான தாக்குதலில் 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 1 இலட்சத்து 62 ஆயிரத்து 367 பேர் படுகாயங்களுக் குட்பட்டுள்ளனர். 21 ஆயிரம் குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் காசாவின் 90 விகிதமான கட்டடங்கள் முற்றிலுமாக சேதடைந்துள்ளன. இந்நிலையிலேயே இஸ்ரேல் அரசு காசா மக்களை அங்கிருந்து வெளியேறி தமது பாதுகாப்பு வலயத்திற்குள் செல்லுமாறு அறிவிறுத்தியுள்ளது.

எது எவ்வாறாயினும் காசாவில் இஸ்ரேல் மேற்கொள்ளும் தாக்குதல்கள் பாரிய மனித உரிமை மீறல் என சர்வதேச நாடுகள் பல சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இன்று ஐ.நா சபை கூட்டத்தொடர் தொடங்கவுள்ள நிலையில் ஐ.நாவின் அழுத்தத்தைச் சமாளிக்க இஸ்ரேல் பாதுகாப்பு வலயம் என்ற புதிய கதையை விட்டிருப்பதாகவும் அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (க-8)

ம் ள்



றன. காப்பு வந்த ருந்து னுப்ப துள்ள றித்த ற்றுள் (க-8)

# ஏ.ஐ மனிதகுலத்திற்கு எதிரானது எச்சரிக்கை விடுக்கும் பேராசிரியர்

(வோஷிங்டன்)

2030 ஆம் ஆண்டுக்குள் உலகளவில் 90% தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை உருவாகும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சமீப காலங்களில் பல பெரும் நிறுவனங்கள் தங்கள் செலவுகளை குறைப்பதற்காக ஏஐ (AI) வசதிகளை பயன்படுத்தி மனிதவளத்தை குறைக்க ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில், இந்த முக்கிய எச்சரிக்கையை அமெரிக்காவின் லூயிஸ்வில் பல்கலைக்கழக கணினி அறிவியல் பேராசிரியர் ரோமன் யம்போல்ஸ்கி விடுத்துள்ளார்.

தொழில்களை தானியங்கியாக்கும் இந்த தொழில்நுட்பம், பல முன்னணி நிறுவனங்களில் வேலை இடங்களைக் குறைக்கும்



நிலைக்கு வந்திருக்கிறது.

அந்தவகையில், "2030 ஆம் ஆண்டுக்குள் உலகளவில் 90% தொழிலாளர்கள் வேலை இழக்கும் நிலை உருவாகும்" என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதுமட்டுமல்லாது, அந்த வேலை இழப்புக்கு மாற்றாக அடுத்த தெரிவு எதுவும் இல்லையென்றும் பேராசிரியர் ரோமன் யம்போல்ஸ்கி கூறியிருக்கிறார்.

இந்த வேலையிழப்பைக் காட்டிலும் வேகமாக ஏஐ வளர்கிறது என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (க-80

## தலிபான்களின் கடும் கட்டுப்பாடு
### இடிபாடுகளுக்குள் சிக்கித்தவிக்கும் பெண்கள்

(காபூல்)

மாற்றுப் பெண்களைத் தொடக்கூடாது என்ற கடுமையான கட்டுப்பாடு காரணமாக ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது இடிபாடுகளுக்கிடையில் சிக்கிய பெண்களை மீட்காமல் கைவிடப்பட்டதாக செய்திகள் வெளியாகி உள்ளன.


தெற்காசிய நாடான ஆப்கானிஸ்தானில், தலிபான் பயங்கரவாத அமைப்பு 2021 இல் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி பெண்களுக்கு பல கட்டுப்பாடுகளை விதித்துள்ளது

இதில் ஒன்று, ஒரு பெண்ணின் நெருங்கிய ஆண் உறவினர், அதாவது தந்தை, சகோதரர், கணவர் அல்லது மகன் மட்டுமே பெண்ணை தொட அனுமதி உண்டு. அதேபோன்று, பெண்களும் தங்கள் குடும்பத்தைத் தவிர வெளியில் உள்ள ஆண்களை தொடவும் தடை உள்ளது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் சமீபத்தில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில், 2,200 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர் 3,600இற்கும் மேற்பட்டோர் காயம்அடைந்தனர்.குறித்த நிலநடுக்கத்தில் இழந்த கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிய பெண்களை மீட்புப் பணியாள்கள், குறித்த சட்டத்தினால் மீட்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘எமது கரங்களில் இரத்தக் கறை இல்லை’ கூறுகிறார் நாமல் ராஜபக்ஷ



(கொழும்பு)

எமது கரங்களில் இரத்தக் கறை படியவில்லை. சட்ட விரோத செயற்பாடுகளுக்கு துணை போகவில்லை. போதைப்பொருள் வியாபாரத்தை ராஜபக்ஷர்கள் மீது சுமத்த இடமளிக்க போவதில்லை. உண்மையை வெளிப்படுத்தும் வரை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்போம். நுவரெலியாவில் நடத்திச் செல்லப்பட்ட ஐஸ் போதைப்பொருள் நிலையத்தின் இடம் யாருக்கு சொந்தமானது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும். என்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே மேற் கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஐஸ்போதை வஸ்து நிலவரம் தொடர்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் தொடர்பிலும் பொலிஸார் மாறுப்பட்ட விடயங்களை குறிப்பிட்டுள்ளனர்.

கட்சி மட்டத்தில் அந்த உறுப்பினரின் உறுப்புரிமை நீக்கப்பட்டுள்ளது. அரசியல் பழிவாங்கலில்லாமல் அரசாங்கம் நடுநிலையான விசாரணைகளை மேற் கொள்ள வேண்டும்.

நாங்கள் ஒழுக்கமாகவே செயற்படுகிறோம். கட்சியின் எவரேனும் உறுப்பினர் ஒழுக்கமற்ற வகையில் செயற்பட்டால் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தனது அரசியல் நிலைப்பாட்டுக்கு இந்த சம்பவத்தை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ள கூடாது. நடுநிலையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே உண்மை வெளிவரும், நியாயம் கிடைக்கும்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவத்தில் தமது பொறுப்பை சரிவர செய்யவில்லை என்று குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் அரசாங்கத்தின் உயர் பதவிகளில் உள்ளார்கள். பொறுப்பற்ற வகையில் செயற்பட்டதற்கான பொறுப்பினை ஏற்காமல் அதனையும் பிறிதொரு தரப்பினர் மீது சுமத்துகிறார்கள்.

எமது கரங்களில் இரத்தக் கறை படிய வில்லை .சட்ட விரோத செயற்பாடுகளுக்கு நாங்கள் ஒருபோதும் துணை போகவில்லை.ஆகவே நாங்கள் திணறப்போவதில்லை போதைப்பொருள் வியாபாரத்தை ராஜபக்ஷர்கள் மீது சுமத்த இடமளிக்கப் போவதில்லை. உண்மையை வெளிப்படுத்தும் வரை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (க-8)

## தொன்மைச் சின்னங்களை பாதுகாக்குமாறு தென்மராட்சி அபிவிருத்தி கழகம் கோரிக்கை

(சாவகச்சேரி)

தொன்மைச் சின்னங்களைப் பாதுகாக்க உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் செயலாளர் ந.சஞ்சயன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது கோரிக்கையில் முன் வைத்துள்ளதாவது,

எமது கிராமங்களின் வரலாறும் பாரம்பரியச் சின்னங்களும் சமூக ஒற்றுமை மற்றும் கலாசார அடையாளங்களின் பிரதிபலிப்பாக உள்ளன.

அவற்றுள் முக்கியமான இடத்தைப் பெறுவது சுமைதாங்கிகள் ஆகும். சுமைதாங்கிகள் வெறும் கற்கள் அல்ல, முன்னோர்கள் பயணங்களில் சுமைகளை இறக்கி ஓய்வெடுக்க அமைத்துக் கொண்ட கட்டமைப்பாகவும், சமூகத்தின் அன்பும் ஒற்றுமையும் பிரதிபலிக்கும் தொன்மைச் சின்னமாகவும் விளங்குகின்றன.

அதேசமயம், சில சுமைதாங்கிகள் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்தவையாகவும் கருதப்படுகின்றன. இத்தகைய மரபுரிமைச்சின்னங்கள் அழிந்து போவது நம் வரலாறே அழிந்து போவதற்கு சமமாகும். இன்று பல சுமைதாங்கிகள் புறக்கணிக்கப்பட்டும், சில இடங்களில் அழிக்கப்பட்டும் வருகின்றன. இது வருந்தத்தக்க விடயமாகும்.

எனவே பிரதேச செயலகம், தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள சுமை தாங்கிகள், பழமையான கிணறுகள், மடங்கள், கேணிகள் போன்ற பாரம்பரியச் சின்னங்கள் என்பவற்றை அடையாளம் கண்டு அவற்றிற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் உள்ளூராட்சி சபைகளின் ஒத்துழைப்புடன் அவற்றின் சுத்தம், பழுது பார்த்தல் மற்றும் சுற்றுப்புற அழகுபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். மேலும் தொல்லியல் திணைக்களத்துடன் இணைந்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சுமை தாங்கிகளை பாதுகாக்கப்பட்ட பாரம்பரியச் சின்னங்களாக பதிவு செய்யப்பட வேண்டும்.

அடுத்த தலைமுறைக்கு இதன் அருமையை எடுத்துரைக்கும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்ய வேண்டும் என அவர் தனது கோரிக்கை கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். (3-30)

# இது சினிமா அல்ல- இது அரசியல் அல்ல- இது உயிர்வாழ்வு பருத்தித்துறை மீனவர் போராட்டத்திற்கான குரல்

“இலங்கை கடற்படை நூற்றுக்கணக்கான (800) இந்திய மீனவர்களை சுட்டுக் கொன்றுள்ளது, எனவே கச்சத்தீவை விடுவிக்க வேண்டும்” என்று இந்திய நடிகர் விஜய் சமீபத்தில் கூறியது தமிழகத்திலும் ,இலங்கையிலும் அலசும் அலைகளை உருவாக்கியுள்ளது. சிலர் அவரது வார்த்தைகளை மறுத்தாலும், வட இலங்கை மீனவர்களின் புறக்கணிக்கப்பட முடியாத கள யதார்த்தத்தைப் புரிந்துகொள்வது முக்கியம்.

**நமது கடல்களின் யதார்த்தங்கள்**

காங்கேசன்துறை முதல் வடமராட்சி கிழக்கு வரை, இந்திய இழுவை படகுகளின் ஊடுருவலால் ,இலங்கை மீனவர்கள் தொடர்ச்சியான துன்பங்களை எதிர்கொள்கின்றனர். இந்தப் படகுகள் தொடர்ந்து கடல் எல்லையைக் கடந்து எமது எல்லைக்குள் அத்துமீறி நுழைகின்றன, நமது வளமான மீன்களை பெரிய அளவில் வேட்டையாடுகின்றன. மேலும் உள்ளூர் வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை அழிக்கின்றன. நமது கடல் பகுதி வெறும் நீர் மட்டுமல்ல -இது தினமும் அதை நம்பியிருக்கும் ஆயிரக்கணக்கான வடக்கு மீனவர்களின் உயிர்நாடி. இந்த ஊடுருவல்கள் பெரும் நிதியிழப்பை ஏற்படுத்துகின்றன மற்றும் நமது சமூகங்களின் அடிப்படை வாழ்வாதாரத்தை இழக்கச் செய்கின்றன.இது நிகழும் ஒவ்வொரு முறையும், நமது மக்கள் தங்கள் ஒரே வருமான ஆதாரத்தை இழக்கிறார்கள். குடும்பங்கள் நமது சொந்த கடல்களால் அல்ல, மாறாக உங்கள் மீனவர்களால் கொள்ளையடிக்கப்படுவதால் பசியால் வாடுகின்றன. நமது மீனவர்களுக்கு,இது ஒரு அரசியல் பிரச்சினை அல்ல, ஆனால் அன்றாட உயிர்வாழ்வின் விடயம். ஒரு குடும்பத்தின் வலைகள் கிழிக்கப்பட்டு அவர்களின் மீன்கள் திருடப்படும்போது, அவர்களின் முழு வாழ்வாதாரமும் இழக்கப்படுகிறது.

**இந்தியாவுக்கு ஒரு நியாயமான கேள்வி**

விஜய் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள மற்றவர்களிடம் நாங்கள் கேட்கிறோம்: இந்தியாவே ஊடுருவல்களை பொறுத்துக் கொள்ளாது. ஒரு பாகிஸ்தான் மீனவர் இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்தால், இந்தியா என்ன செய்யும்? பதில் தெளிவாக உள்ளது - இந்திய அதிகாரிகள் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள் அல்லது இந்திய கடலோர காவல்படை மற்றும் கடற்படை உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்கும். இந்திய இழுவைப் படகுகளால் மீண்டும் மீண்டும் அத்துமீறல்கள் மற்றும் அதன் பிராந்திய நீர்நிலை மீறல்களுக்கு எதிராக இலங்கை ஏன் அமைதியாக இருக்க வேண்டும்? நமது கடல்கள் எங்கள் வீடு, நமது கடல்களைப் பாதுகாப்பது ஒரு சட்டப்பூர்வ பொறுப்பு, உயிர்வாழும் தேவை மற்றும் ஒரு தார்மீகத் தேவை.

**மீனவர்களின் பார்வை**

தொடர்ச்சியான அத்துமீறல்களால் நமது மக்கள் படகுகள், வலைகள் மற்றும் அவர்களின் வருமான ஆதாரத்தை இழந்துள்ளனர். இது அரசியல் சார்ந்த விடயம் அல்ல -இது உயிர் வாழ்வைப் பற்றியது. வலைகள் அழிக்கப்பட்டு மீன் வளம் குறைந்து விட்டால், பருத்தித்துறை அல்லது மைலிட்டியில் உள்ள ஒரு குடும்பம் அன்றிரவு பசியால் வாடுகிறது. இந்த யதார்த்தத்தை புறக்கணிக்க முடியாது, மேலும் ஒரு நடிகராக நீங்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கலாம்.

**திறந்த அழைப்பு**

எங்கள் போராட்டத்தை சந்தேகிப்பவர்களுக்கு அல்லது இந்தியாவைச் சேர்ந்த விமர்சகர்கள் மற்றும் தலைவர்களுக்கு, நாங்கள் வெளிப் படையாக ஒரு அழைப்பை விடுக்கிறோம்: பருத்தித்துறைக்கு வாருங்கள். மாலையில் கடலைப் பாருங்கள், எங்கள் மீனவர்களுடன் கடலுக்குள் பயணம் செய்யுங்கள், உங்கள் மீன்பிடி இழுவைப் படகுகளால் ஏற்படும் மீறல்கள் மற்றும் பேரழிவை நீங்கள் நேரடியாகக் காண்பீர்கள்.

**தவறான இலக்கு**

இலங்கையைக் குறை கூறி கச்சத்தீவை விடுவிக்கக் கோருவதற்குப் பதிலாக, விஜய் தனது கவனத்தை உண்மையான பிரச்சினைக்குச் செலுத்த வேண்டும்: இலங்கைக் கடலில் இந்திய இழுவை படகுகளின் அழிவுகரமான வேட்டையாடுதல் மற்றும் கச்சத்தீவு இலங்கையின் ஒரு பகுதியாகும் என்பதை புரிந்துகொள்ளவேண்டும், மேலும் அதை தமிழ்நாட்டில் அரசியல் பிரபலத்திற்கான பேரம் பேசும் பொருளாகக் கருத முடியாது.

கச்சத்தீவு வெறும் குறியீட்டு பிரச்சினை அல்லது மீனவர்களின்



சுதந்திர பத்திரிகையாளர்
ம.பிரான்ஸ்க்

கண்ணியம், வாழ்வாதாரம், உரிமைகள் மற்றும் எதிர்காலத்தை பிரதிபலிக்கிறது. விமர்சிப்பதற்குப் பதிலாக, மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் எல்லைகளை மதிக்கும் நியாயமான, மனிதாபிமான மற்றும் நிலையான தீர்வைக் கண்டறிய தலைவர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். விஜயின் கருத்துகள் தமிழ்நாட்டில் கைதட்டல்களைப் பெறலாம், ஆனால் அவை இலங்கை தமிழ் மீனவர்களின் துன்பங்களை புறக்கணிக்கின்றன. நாங்கள் நியாயம், நேர்மை மற்றும் பரஸ்பர மரியாதைக்கு அழைப்பு விடுக்கிறோம். அரசியலுக் காக நம் மக்களின் வாழ்க்கையை நிராகரிக்க முடியாது. ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கச்சத்தீவுக்குச் சென்று கச்சத்தீவு எங்களுடையது என்று வெளிப்படையாகக் கூறினார். இது சினிமா அல்ல, இது அரசியல் அல்ல- இது உயிர் வாழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## குதிரைவாலி அரிசி

Botonical Name- Echinochloa esculenta
Family - Poaceae



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

குதிரைவாலி அரிசி எளிதாக வளரக்கூடியது.பூச்சித்தாக்கத்திற்கு அதிகம் பாதிப்பில்லாமல் வளரக் கூடியது.விதைத்த காலத்திலிருந்து 45 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும்.குதிரைவாலி அரிசியை சூழ வுள்ள உமியானது எளிதில் ஜீரண மாகாத தடித்த செலுலோசு பகுதியாகும். உமி நீக்கப்பட்டதும் பயன்பாட்டிற்கு குதிரைவாலி அரிசி தயாராகுகிறது.நாம் சாதாரணமாக பயன்படுத்தும் அரிசியை விட மிகமிக ஆரோக்கியமானது குதிரைவாலி அரிசியாகும்.ஏனெனில் இதிலிருக்கும் சத்துகளேயாகும். முதலாவதாக இதிலிருக்கும் இரும்புச் சத்து மற்ற அரிசியை விட அதிகமாகக் காணப்படும்.எனவே குழந்தைகள், பெண்கள் எல்லோருக்கும் முக்கிய மானதாகும்.

ஒரு நாளைக்கு தேவையான இரும்புச் சத்தில் குதிரைவாலி அரிசிச்சோறு 100 கிராம் சாப்பிடும் போது 67% இரும்புச் சத்தை பெற்றுக் கொள்ளலாம்.வாரம் ஒருமுறையாவது இவ் அரிசிச் சோற்றை சாப்பிட வேண்டும் கர்ப் பிணிகளுக்கு மிகவும் உகந்தது. கிட்டத்தட்ட 100 கிராம் குதிரைவாலி அரிசியிலிருந்து 300 கலோரிகள் எமக்கு கிடைக்கக் கூடியதாக இருக்கும்.அடுத்ததாக மற்ற அரிசிவகைகளை விட குதிரைவாலி அரிசியில் புரதச்சத்து அதிகமாகக் கிடைக்கும்.100 கிராம் அரிசியில் 11gm-19 கிராம் வரை புரதச்சத்து கிடைக்கும். இருக்கிற அரிசி,நெல் வகைகளில் குதிரைவாலி அரிசியில்தான் நார்ச்சத்து அதிகமாகக் காணப்படும்.எனவே எளிதில் ஜீரணமாகாது,மெதுவாக ஜீரணமாகும், மெதுவாகவே இரத்தச் சக்கரை அளவைக் கூட்டும். அதனால் தான் குதிரைவாலி அரிசிக்கு சர்க்கரை உயர்த்தும் திறன் மிகக்குறைவு. எனவே தான் நீரிழிவு நேயாளிகள் பயன்படுத்தலாம்.

ஆனால் ஒரே அரிசியை தினமும் எடுக்காமல் வாரத்தில் ஒருமுறை சாப்பிடலாம்.

மேலும் 100 கிராம் குதிரைவாலி அரிசியில் 22 மில்லி கிராம் கல்சியம் சத்தும் காணப்படுகிறது.வளரும் குழந் தைகட்கு அத்தியாவசியமானது.அத்து டன் என்புகள் வலிமை பெறுவதோடு பற்களும் உறுதியடையும்.அத்துடன் இன்று நீரிழிவு நோயாளிகள் அரிசி உணவிற்கு மாற்றாக கோதுமை அரிசியை பயன்படுத்துகின்றனர். ஆனால் கோதுமையக் காட்டிலும் இந்த குதிரை வாலி அரிசி தான் உடலில் அதிக அளவில் உடனே சர்க்கரை சேராமல் இருக்க உதவுகிறது.குதிரைவாலி அரிசி யிலுள்ள நார்ச்சத்து செரிமான மண்டலத்தின் ஆரோக்கியத்தை மேம் படுத்தி நீண்ட நேரம் பசி எடுக்காமல்



இருக்க உதவுவதோடு,உடல் எடையை கட்டுக்குள் வைத்திருக்கவும், மலச் சிக்கல் பிரச் சினைகளை சரிசெய்யவும் உதவுகிறது.

அடிக்கடி உதடுகளில் வெடிப்பு, புண்கள் வருவதற்கு உயிர்ச் சத்து B குறைபாடும் ஒன்றாகும். குதிரைவாலி அரிசியில் உயிர்ச்சத்து B1,B2,B3 போன்ற சத்துகள் அதிகமாக இருக்கிறது. எனவே தோல்,உதடு வெடிப்பு ,புண் போன்ற நிலைமைகளுக்கு சிறந்தது. மேலும் புற்றுநோய் வராமல் தடுக்கக் கூடிய Antioxidant புண்கள் அதிகம். அத்துடன் குதிரைவாலி அரிசியில் பல்வேறு ஊட்டச்சத்துக்கள் காணப்ப டுவதால் நரம்புகளுக்கு சிறந்தது. குதிரை வாலி அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் குதிரைவாலி அரிசிக்கஞ்சி மிகவும் சிறந்த உணவாகும். குதிரை வாலி அரிசியை மாவாக்கி இட்லி ,தோசை, ரொட்டி போன்ற பல்வேறு வகையான உணவுகள் தயாரிக்கலாம்.கஞ்சி தயா ரிப்பை எடுத்துக்கொண்டால் குதிரை வாலி அரிசி சின்னச்சீரகம்,வெங்காயம் , மிளகு,உள்ளி,வெந்தயம்,இஞ்சி, கறி வேப்பிலை,ஒரு வாணலியை அடுப் பேற்றி அதில் அரிசியை வறுத்தெடுக் கவும், பின்பு வாணலியில் ஒரு கரண்டி நெய் ஊற்றி கொஞ்சம் சீரகம் , வெந் தயம்,மிளகு,வெங்காயம் போட்டு வதக்கி , பின்பு பூண்டும் சேர்த்து நன்றாக வதக்கி, இஞ்சித்துண்டையும் தோல் நீக்கி சேர்த்து நன்றாக வதக்கி, நீர் ஊற்றி , தண்ணி கொதித்ததும் அரிசியை போட்டு ,லேசாக உப்பு போட்டு மூடி கொதிக்க விட்டு கஞ்சியானதும் பயன்படுத்தலாம். ஆரோக்கியத்திற்கு மிகமிகச் சிறந்தது.

வாரத்தில் ஒரு தடவையாவது கட்டாயம் செய்து சாப்பிட சிறந்த பலனைக் கொடுக் கும் இவ்வளவு நல்ல மருத்துவ குணங்கள் நிறைந்து இருப்பதனால் தினமும் இவ் வரிசியை மட்டும் பயன்படுத்தினால் நிறைய நார்ச்சத்து இருப்பதனால் மற்ற சத்துக்கள் எடுக்கமுடியாமல் போய் விடும்.அடிக்கடி குதிரைவாலி அரிசியை எடுத்துக் கொண்டால் இதயம் ஆரோக்கியமாகும். இதில் காணப்படும் நார்ச்சத்து, மக்னீசியம்,பொட்டாசியம் ஆகிய சத்துக்கள் இரத்த அழுத்தத்தை கட்டுப் படுத்துவதற்கும்,கொலஸ்ரோல் அளவை கட்டுப்படுத்துவதற்கும் உதவுவதால் இதய ஆரோக்கியம் மேம்படும். குதிரை வாலி அரிசியில் ரிபோலிளேவின், தயமின் போன்றவை நிறைந்துள்ளது. இதனை கஞ்சியாக இரவில் எடுத்துக் கொண்டால் சீரான,ஆழ்ந்த உறக் கத்தை ஏற்படுத்தும். குதிரை வாலி அரிசி இரும்புச்சத்து நிறைந்த ஒரு வகை சிறுதானியமாகும்.எனவே இரத்த சிவப்பு அணுக்களில் உற்பத் தியை அதிகரித்து இரத்த சோகையை சரிசெய்ய உதவுகிறது. மேலும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச்செய்யும். பீட்டா கரோட்டினொயிட்டுகள் அதிகம் காணப்படுவதனால் கண் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்படாமல் தடுக்கும். அத்தோடு உடலில் உள்ள தேவை யில்லா உப்புகளை கரைக்கும் தன்மை கொண்டது. சிறுநீரை அதிகமாக பெருகச் செய்கிறது.

குதிரைவாலி அரிசிச் சோற்றுக்கு மோர் சேர்த்து சாப்பிடும் போது வயிற்றுப்புண் குணமாகும். வளரும் குழந்தைகட்கு கட்டாயமாக குதிரைவாலி அரிசிச் சோறு கஞ்சியை பயன்படுத்தவேண்டும். இவர்களுக்கு தேவையான புரதம், கல்சியம், பொஸ்ப ரஸ், இரும்புச்சத்து, நார்ச்சத்து, அன்டி ஒக்ஸிடன்ட் போன்றவை குதிரைவாலி அரிசி பயன்படுத்துவதனால் தேவையான அளவு கிடைக்கின்றது. இதனால் வளரும் குழந்தைகள் சுறு சுறுப்பாகவும் ,ஆற்ற லுடன் இருப்பார்கள். அத்துடன் குதிரைவாலி அரிசியானது பசையம் இல்லாத (Gluten -Free) உணவுமாகும். எனவே குதிரைவாலி அரிசி ஜீரணிக்க எளிதானதும் மற்றும் உடலில் ஒவ்வாமையை ஏற்படுத்தும் வாய்ப்பு குறைவாகும்.

# இராசிபலன்

08.09.2025
ஆவணி 23 , திங்கட்கிழமை
பிரதமை முன்னிரவு 10.50 மணிவரை

புரட்டாதி முன்னிரவு 10.21 மணிவரை
சுபநேரம் 12.04-1.34 மணிவரை
இராகுகாலம் 7.34-9.04 மணிவரை

மஹாளயபட்ச ஆரம்பம்
சந்திராஷ்டமம்
ஆயிலியம், மகம்.

வளவன்




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள்.




தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், கோரிக்கைகள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.




உதவுவதாக சொன்னவர்கள் உங்களை விட்டு விலகலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், சொந்த பந்தங்களின் ஒத்துழைப்பால் சிந்தை மகிழ்வீர்கள், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொலைபேசித் தகவல்கள் மகிழ்ச்சி தரும்




பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், காரிய அனுகூலமுண்டு.




சுப காரிய பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், செய் தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள்.




வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வளர்ச்சிப் பாதை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




பாகை பிவிவினைகள் சுமூகமாக அமையும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசனசுகமுண்டு.




காணாமல் போன பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சொன்ன சொல்லை காப்பாற்றி மகிழ்வீர்கள்




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை




உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது,தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள்.

**விளம்பரத்தை அதிகம் நம்பாதே அவை பெரும்பாலும் கதைகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 860





வைத்தியர் மகன் கெட்டிக்காரன் என்றே தோன்றுகிறது. இத்தனை தூரம் அழைத்துக் கொண்டு வந்துவிட்டான் அல்லவா?"

"குருதேவரே! இந்த விடயத்தில் தங்கள் ஊகம் சரியல்லவென்று தோன்றுகிறது. மந்தாகினி தேவி தாமே விரும்பித்தான் வந்திருக்க வேண்டும். தஞ்சையை நெருங்கியதும் அவருடைய மனம் மாறியிருக்க வேண்டும்"

மேலும், மந்தாகினி தேவியை என்னால் தடுத்து நிறுத்த முடியுமா? புயற்காற்றை அணை போட்டு நிறுத்தினாலும் நிறுத்தலாம் அந்த மாதரசியை நிறுத்த முடியுமா? இலங்கையிலேயே முயன்று பார்த்துத் தோல்வி அடைந்தவன்தானே. மேலும் அந்த அம்மாளுக்கு என்னை அடையாளம் தெரியும். பார்த்ததும் மிரண்டு ஓடிப் போவார்கள் பிறகு யாராலும் அவரைப் பிடிக்க முடியாது"

"அதை நினைத்தால்"

"இருக்கலாம் இருக்கலாம், ஆனாலும் இதற்குள் அதிக தூரம் அந்தக் கரையர் மகள் போயிருக்க முடியாது. இரவெல்லாம் காற்றும் மழையுமாக இருந்ததல்லவா? சமீபத்திலேதான் எங்கேயாவதுதான் இருக்க வேண்டும். திருமலை! எப்படியாவது அவளைப் பிடித்தாக வேண்டும். ஒரு வேளை இந்தப் பெண்ணுக்கு அவள் தங்குமிடம் தெரிந்திருக்கலாம் மகளே! உன் பெயர் என்ன?"

"பூங்குழலி, ஐயா!"

"ஆகா! அழகான பெயர்! பெயர் வைப்பதில் தியாக விடங்கரின் சாமர்த்தியத்துக்கு இணையே கிடையாது. பூங்குழலி! உன் அத்தை எங்கே தங்கியிருப்பாள் என்று உனக்குத் தெரிந்திருக்கும். தெரிந்தால் சொல்லு! அவளுக்கு ஒன்றும் கெடுதல் நேராது."

பூங்குழலி சிறிது யோசித்துவிட்டு, "சுவாமி! என் அத்தை இப்போது இருக்கக்கூடிய இடம் எனக்குத் தெரியும். அவளை எதற்காகத் தாங்கள் பிடித்துக் கொண்டு வரச் செய்தீர்கள் என்று சொன்னால், நானும் அவள் இருக்குமிடத்தைச் சொல்லலாம்"

"பூங்குழலி! அது பெரிய இராஜாங்க விஷயம். அரண்மனையைப் பற்றிய இரகசியம் உன்னிடம் சொல்ல முடியாது." "நானும் சொல்ல முடியாது!"

"இந்தப் பெண்ணுடன் பேசிச் சாத்தியப்படாது.." "ஐயா! ஒரு நிபந்தனையை நிறைவேற்றுவதாயிருந்தால்"

"ஆகா! எனக்கு இந்தப் பெண் நிபந்தனை போடுகிறாளாம்! அது என்ன?"

"என் அத்தையைத் தஞ்சாவூர்ச் சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து மணிமகுடம் சூட்டுவதாயிருந்தால், அவளை நானே அழைத்து வருகிறேன்."

"திருமலை! இந்தப் பெண்ணுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது!"

"அதை இப்போதுதானா கண்டீர்கள், குருதேவரே! இவளை ஒன்றும் கேட்கவே வேண்டாம். இவள் அத்தை இருக்குமிடம் எனக்குத் தெரியும். இவள் அத்தை மகன் சேந்தன் அமுதன் கோட்டைக்குச் சற்றுத் தூரத்தில் பூந்தோட்டத்தில் இருக்கிறான். அவனும் அவனது அன்னையும் தளிக்குளத்தார் கோயிலுக்குப் புஷ்ப கைங்கரியம் செய்கிறவர்கள்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## ராமுவின் பெரும் உதவி



அந்த பெண்ணின் மடியில் இருந்த குழந்தை மெல்ல அம்மாவின் கையை விட்டு இறங்கி அந்த மண்ணின் மீது தவழ்ந்தவாறு நடக்க ஆரம்பித்து விட்டது.

அந்தக் குழந்தை நடந்த பாதை அருகே தான் அந்த விவசாயி போட்டிருந்த ஆழ்துளை கிணறு இருந்தது. அது மூடாமலும் இருந்தது. அந்தக்குழந்தை திறந்திருந்த அந்த துளையில் மெல்ல கை விட்டு பின் கையை எடுத்து விளையாடியது.அதன் பின் என்ன நினைத்ததோ தெரியாது மெல்ல திருப்பி ஒரு காலை விட்டு விளையாடியது. இதை எதுவும் அறியாத அந்த பெண் நல்ல தூக்கத்துக்கு செல்ல ஆரம்பித்து விட்டாள்.

திடீரென ஒரு சத்தக் குரல் எழுந்தது திடுக்கிட்டு விழித்த அந்தப் பெண் தூரத்தில் ஒரு பையன் கீழே படுத்து கிடப்பதையும் எதையோ கையில் பிடித்தவாறு கத்திக்கொண்டிருப்பதையும் பார்த்தவள், திடீரென நினைவு வந்தவளாய் தன் குழந்தையை தேட அது காணாமல், பதட்டத்துடன் எதையோ கையில் பிடித்துக் கொண்டு கத்திக் கொண்டு படுத்துக் கிடந்த அந்த பையனின் அருகில் ஓடிப் போய் பார்த்தவளுக்கு மூச்சே நின்றுவிட்டது போல் இருந்தது.

தன்னுடைய குழந்தையின் முக்கால் வாசி உடல் அந்த குழியில் உள்ளே இருக்க, கழுத்தை மட்டும் அந்தப் பையன் பிடித்து கத்திக் கொண்டிருந்தான். அந்த பெண்ணும் உதவி உதவி என்று கூச்சலிட்டுக் கொண்டு அந்தப் பையனோடு சேர்ந்து தானும் தன் குழந்தையை பிடித்துக் கொண்டாள்.

அதற்குள் சத்தம் கேட்டு அந்த வழியாக போவோர் வருவோர் அனைவரும் வந்துவிட்டனர். பின் அங்கிருந்த அனைவரும் சுற்றிலும் உள்ள மண்ணை மெல்ல எடுத்து கொஞ்சம் கொஞ்சமாக அந்த குழந்தையை வெளியே எடுத்தனர். நெடுநேரம் குழந்தையின் கழுத்தை பிடித்திருந்தால் அந்த குழந்தைக்கு மூச்சு திணறல் எடுத்து மயக்க நிலைக்கு போயிருந்தது. உடனே குழந்தையை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

குழந்தை நல்லபடியாக பிழைத்துக்கொண்டது. எல்லோரும் அந்த விவசாயிடம் சென்று உங்களால் ஒரு குழந்தை சாகத்தெரிந்தது. இந்த பையனால்தான் பிழைத்தது, என்று சொன்னார்கள் அந்த விவசாயி "தம்பி" அன்று நீங்கள் எல்லாம் சொன்னபோது வழியில் போறவங்க தானே, என்று கண்டு கொள்ளாமல் விட்டு விட் டேன். இன்று வீணான பழிச் சொல்லுக்கு ஆளாகாமல் என்னை காப்பாற்றி விட்டாய் என்னை மன்னித்துக் கொள் என்றார்.

ராமு ஐயா நீங்கள் பெரியவர்கள், என்னிடம் மன்னிப்பு எல்லாம் கேட்கவேண்டாம். நான் என் தந்தைக்கு சாப்பாடு எடுத்துக்கொண்டு அந்த வழியாக வந்து கொண்டிருந்தேன். ஒரு குழந்தை தனியாக வருவதை தூரத்தில் இருந்து பார்த்து விட்டேன். அப்புறம் தான் எனக்கு ஞாபகம் வந்தது இங்கு ஒரு குழி இருக்குமே என்று ஓடி வந்தேன். அதற்குள் குழந்தை அந்த குழிக்குள் காலை விட்டு விட்டது.

உடனே ஓடி வந்து அதனை பிடிக்க முயல்வதற்குள் உடல் உள்ளே இறங்க ஆரம்பித்துவிட்டது. வேறு வழியில்லாமல் கழுத்தை என் கரத்தோடு இறுகப்பற்றி அப்படியே படுத்துக் கொண்டு சத்தம் போட்டேன். நல்ல வேளை அதற்குள் அந்த குழந்தையின் அம்மாவும் வந்ததால் நல்லதாகப்போயிற்று என்று கூறினான். அந்த ஊர் மக்கள் இன்றும் ராமுவின் அந்த பெரும் உதவியைப் பற்றி புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உலகம் உன்னை அறிவதை விட, உன்னை உலகிற்கு அறிமுகம் செய்துகொள்.
> – அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை மறக்காமல்...

தமிழர்களுக்கு எதிராக நடந்த கொடுமைகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதில் ஐ.நா மனித உரிமைகள் பேரவை உறுதியாக இருக்கின்றது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர்களாக இருந்த அத்தனை பேரும் இலங்கை விவகாரத்தை மிகவும் தெளிவாகப் புரிந்து கொண்டு அறிக்கையிட்டுள்ளனர்.

அந்த வகையில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடர் இன்று (08) ஆரம்பமாகவுள்ள நிலையில், இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாக வெளிவிவகார அமைச்சர் விஜிதஹேரத் பங்கேற்று ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் நிலைப்பாட்டைக் கூறவுள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை அரச பிரதிநிதியாகப் பங்கேற்றவர்கள்; தமிழ் மக்களை மூன்றாந்தரப் பிரஜைகளாக கருத்தில் கொண்டே தங்களின் அறிக்கைகளையும் உரைகளையும் முன்வைத்தனர்.

ஆம், கடந்தகால அரசாங்கங்கள் எவையும் தமிழ் மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற நினைப்போடு தங்களின் அறிக்கை களை முன்வைக்கவில்லை.

மாறாக தமிழ் மக்களை தங்களின் எதிரிகள் போலக் கருதுகின்ற அவர்களின் மன நிலையே அங்கு வெளிப்பட்டிருந்தது.

எனினும் இன்று (8) ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத் தொடரில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கம் பதிலளிக்கவுள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதிகள் முன்வைக்கின்ற பதிலளிப்பில் இருந்து, அநுர அரசாங்கத்தின் நிலைப்பாடு எவ்வாறாக உள்ளதென்பது தெரியவரும்.

ஆம், செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து மீட்கப்படுகின்ற மனித எலும்புக் கூடுகள் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி எத்துணை கொடுமையானதென்பதைப் பகிரங்கப்படுத்தியுள்ளது.

அதேவேளை செம்மணி மனிதப் புதைகுழி போன்ற சம்பவங்கள் இனிமேல் இந்த நாட்டில் இடம்பெறக்கூடாது என யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் வருகை தந்த ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தனது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

அவர் கூறிய கருத்து சமாதானத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

ஆனால், நடந்த கொடுமைகளுக்கு விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிப்பதென்பது கட்டாயமானது.

அதாவது ஜனாதிபதி கூறிய கருத்து நிலைபெற வேண்டுமாயின், செம்மணி மனிதப் புதைகுழிக் குற்றவாளிகளுக்கு உச்சமான தண்டனை வழங்குவது கட்டாயம்.

நிலைமை இதுவாக இருக்கையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அநுர அரசாங்கம் முன்வைக்கின்ற அறிக்கையானது தமிழர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை உறுதி செய்வதாக இருப்பதிலேயே எல்லாம் தங்கியுள்ளது.

# வங்கித் தகவல்களைப் பயன்படுத்தி சமூக ஊடகம் மூலம் மோசடிகள்

## பொதுமக்களுக்கு பொலிஸார் எச்சரிக்கை

வங்கித் தகவல்களைப் பயன்படுத்தி சமூக ஊடகங்களினூடாக மோசடிகளில் ஈடுபடுவோருக்கு பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வங்கியின் சார்பாக பரிசுகளை வழங்குவதாகப் பொய்யாகக் கூறும் மோசடி செய்தியொன்று தற்போது சமூக ஊடகங்களில் பரவி வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் செய்தி பொது மக்களை ஏமாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு மோசடியின் பகுதி என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்த மோசடி தனிப்பட்ட தகவல்களைத் திருடவும், கையடக்கத் தொலைபேசியிலுள்ள மென்பொருளைச் சேதப்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக தங்கள் அமைப்புக்கு ஏராளமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக இலங்கை கணினி அவசர கால பதிலளிப்பு குழுவின் (SLCERT) தலைமை தகவல் பாதுகாப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த தெரிவித்துள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகள் மூலம் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நபர்கள் இது போன்ற மோசடி செய்திகள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

# இலங்கையில் இடம்பெறும் கைதுகள் பெரும்பாலானவை அரசியல் கண்காட்சி

## ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்த்தன

இலங்கையில் இடம்பெறும் கைதுகளில் பெரும்பான்மையானவை அரசியல் கண்காட்சிக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. அதனாலே நூறு பேர் கைது செய்யப்பட்டால் அதில் 98 பேர் விடுவிக்கப்படுகின்றனர். இந்தக் கலாசாரத்தை அரசியலமைப்புத் திருத்தம் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் அமைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில், யாராவது ஒரு நபர் கைது செய்யப்பட்டால் அது தண்டனையாக கருதப்படுவதில்லை என அரசியலமைப்பில் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் இலங்கையில் யாராவது கைதுசெய்யப்பட்டால், தண்டனையாக அவருக்கு கை விலங்கிடப்பட்டு, அரசியல் கண்காட்சி இடம்பெறுவதை காணக்கூடியதாக இருக்கிறது.

ஆனால் இந்த நடவடிக்கை உலக நாடுகளில் இதனைவிட மாற்றமாகும். இந்தியா, ஜப்பான், அமெரிக்க அரசியலமைப்பில் இந்த உறுப்புரை இதனைவிட மாற்றமானதாகும்.

ஜப்பானில் விசாரணை மேற்கொண்டே கைதுகள் இடம்பெறுகின்றன. 100பேரை விசாரணைக்கு எடுத்துக்கொண்டால், 98 பேர் குற்றவாளியாகின்றனர். ஆனால் இலங்கையில் 100 பேரை விசாரணைக்கு எடுத்துக்கொண்டால், 98பேர் குற்றமற்றவர்களாக வீடுசெல்கிறார்கள். அதனால் இந்த கலாசாரத்தை மாற்றுவதாக இருந்தால், அரசியலமைப்பில் இந்த உறுப்புரைகளில் திருத்தம் மேற்கொள்ள வேண்டி இருக்கிறது.

விசாரணைகளை பலப்படுத்த வேண்டி இருக்கிறது. விசாரணைகளின் அறிக்கையின் பிரகாரமே நீதிமன்றம் செயற்படுகிறது.

இலங்கையில் இதுதொடர்பான புள்ளிவிபரங்களைப் பார்த்தால், 100 பேர் கைதுசெய்யப்பட்டால் இரண்டு பேர் குற்றவாளியாக்கப்படுகின்றனர். 98பேர் குற்றமற்றவர்களாக விடுவிக்கப்படுகின்றனர். அதனால் இலங்கையில் கைதுகள் அரசியல் கண்காட்சியாக்கப்பட்டிருக்கின்றன. இந்த அரசியல் கண்காட்சியை எதிர்காலத்தில் அரசியலமைப்பு உறுப்புரைகளில் திருத்தம் மேற்கொண்டு இல்லாமலாக்க வேண்டும்.

குற்றச்சாட்டு ஒன்றுக்காக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டால், அந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்த அவர்களிடம்இருக்கும் ஆதாரத்தைவிட, கைது செய்யப்பட்டவர் தான் நிரபராதி என்பதற்கு 95 வீத ஆதாரம் இருந்தால், கைது செய்தவர்களிடம் அறவிட முடியுமான வகையில் அரசியலமைப்பில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்றார். (ம-7)

# திருகோணமலையில் பட்டாசு வெடித்ததில் ஒருவர் உயிரிழப்பு

(திருகோணமலை)

திருகோணமலை தம்பலகாமம் பகுதியில் உள்ள ஆலயமொன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடைபெற்ற வருடாந்தத் திருவிழாவின் போது பட்டாசு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

அங்கு நடைபெற்ற தேர்ப் பவனியின் போது வானவேடிக்கை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதில் வெடிக்காமல் இருந்த ஒரு பட்டாசை அருகில் இருந்த ஒருவர் காலால் உதைத்துள்ளார். அது மற்றொருவரைத் தாக்கி வெடித்ததில், அவர் தீவிரமாகக் காயமடைந்தார்.

காயமடைந்தவர் தம்பலகாமம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் அதே பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை என அடையாளம் காணப்பட்டுள்ளார். (ம-7)

# வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது

(கொழும்பு)

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட விசேட சோதனையின் போது 40 வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டதாக கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகரித்து வரும் போக்குவரத்து விபத்துக்களைக் குறைப்பதற்காக, கந்தளாய் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சஞ்சீவ பண்டாரவின் அறிவுறுத்தலின் பேரில், கந்தளாய் பிரதான வீதியில் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சோதனையின் போது திருகோணமலைப் பல்கலைக்கழக மாணவர்களை கொழும்பு நோக்கி ஏற்றிச் சென்ற கார் ஒன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதில் 40 வெளிநாட்டு சிகரெட்டுக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டு கந்தளாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ம-7)

# மட்டக்களப்பில் தொடருந்து மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- ஜீவபுரத்தில் புகையிரதம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவமானது நேற்று முன்தினம் (6) இரவு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சந்திவெளி ஜீவநகரைச் சேர்ந்த 28 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான வரதராஜா கிருஷ்ணகாந்தன் என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு 10.00 மணிக்கு மது போதையில் தண்டவாளத்தில் தலையினை வைத்து நித்திரையில் இருந்துள்ளார்.

இந்நிலையில் கடுகதி தொடருந்து மோதியதில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் குறித்த நபர் உயிரிழந்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 54

சொக்கன்


இப்போது நிலைமை ரொம்பவே மாறிவிட்டது. மொசாட்டுக்கென்று தனியாக இணையதளம் கூட ஆரம்பித்து விட்டார்கள். தற்போதைய மொசாட் இயக்குனர் மீர்தகான் மக்களுக்கு வாழ்த்துச் செய்தியெல்லாம் எழுதித் துாள் கிளப்புகிறார்.

தலைவர்கள் வெளிச்சத்துக்கு வரும் போது தொண்டர்கள் மட்டும் இருட்டில் கிடந்தால் எப்படி? மொசாட் கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னுடைய பழைய ப்ராஜெக்ட்கள் அதில் பங்கேற்ற உளவாளிகளின் வீர சாகசங்களைப்பற்றியெல்லாம் பேச ஆரம்பித்திருக்கிறது. முந்தைய அத்தியாயங்களில் நாம் பார்த்த பல சம்பவங்கள் அவர்களே வெளிப்படையாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தவை தான்.

இஸ்ரேலின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றான டெல் அவிவ் அருகே க்ளிலோட் என்ற இடத்தில் இஸ்ரேலிய உளவாளிகளுக்கான ஒரு நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டடத்தின் வடிவம் என்னவாக இருக்கும்? உங்களால் ஊகிக்க முடிகிறதா?

ஓர் உளவாளிக்கு முக்கியமான ஆயுதமே அவனுடைய மூளைதானே? அதைக் குறிப்பிடும் வகையில் இஸ்ரேல் உளவாளிகளின் இந்த நினைவுச் சின்னத்தை மனித மூளையின் வடிவத்தில் அமைத்திருக்கிறார்கள்.

இந்தக் கட்டடத்தினுள் குறுக்கும் நெடுக்குமாகச் செல்லும் சுவர்களில் ஐநூறுக்கும் மேற்பட்ட உளவாளிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவர்கள் எல்லோரும் இஸ்ரேலுக்காக உளவாடச் சென்று அந்தப் பணியின் போது ஆபத்தில் சிக்கி உயிர் இழந்தவர்கள்.




இதுதவிர பல வருடங்கள் உளவாளிகளாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற வயதாகி இறந்துபோன சீனியர் ஏஜென்ட்கள் மற்ற ஊழியர்களைப்பற்றிய விவரங்களையும் கவனமாகத் தொகுத்து வைத்திருக்கிறார்கள். இஸ்ரேல் உளவுத்துறையின் சாதனைகளை விவரிக்கும் குறிப்புகள் அவர்கள் கண்டுபிடித்த, பயன்படுத்திய நவீன கருவிகளின் கண்காட்சியும் இங்கே உண்டு.

அதே சமயம் மொசாட் எல்லா ரகசியங்களையும் வெளிச் சத்துக்குக் கொண்டு வந்துவிட்டார்களா என்றால் இல்லை எதை வெளியே சொன்னால் இனிமேல் பிரச்சினை இருக்காது என்று யோசித்து பத்துக்கு நாலு விடயங்களை மட்டும்தான் இப்படி வெளிப்படையாகப் பேசுகிறார்கள் மற்ற விவரங்கள் சம்பவங்கள் மனிதர்கள் இன்னும் விலகாத மூடுபனிக்குள் கிடக்கிறார்கள்.

இதற்குச் சாட்சியாக நீங்கள் மொசாட் வெளியிடும் அறிக்கைகள் நினைவுக் குறிப்புகளைப் படித்தாலே போதும் எல்லா உண்மைகளையும் சொல்லிவிடப்போகிறோம் என்பதுபோல் சுறுசுறுப்பாகத் தொடங்குவார்கள். கொஞ்சம் கொஞ்சமாக மேலே போய் மசங்கலான ஒரு பிம்பத்தைக் காண்பித்துச் சட்டென்று முடித்துவிடுவார்கள்.

அவர்களைச் சொல்லிக் குற்றம் இல்லை இதற்கு மேல் வாயைத் திறந்தால் மொசாட்டுக்கு தான் ஆபத்து பல நாடுகளில் இன்னும் இரகசிய மாக வேலை செய்து கொண்டிருக்கிற அல்லது மறைந்து வாழ்கிற மொசாட் ஏஜென்ட்கள் வம்பில் மாட்டிக் கொள்வார்கள்.

அவர்கள் செய்கிற வேலையின் முக்கியத்துவம் கருதி வேறு வழியில்லாமல் பல விடயங்களை மறைத்து வைக்க வேண்டியிருக்கிறது. பூடகமாகப் பேசிச் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

க்ளிலோடில் உள்ள இஸ்ரேலிய உளவாளிகளின் நினைவுச் சின்னத்துக்குநிறைய பொது மக்கள் வருகிறார்கள் தங்களுடைய நண்பர்கள் உறவினர்களின் நினைவுக்கு மரியாதை செலுத்துகிறார்கள். உளவுத்துறையில் சேரவேண்டும் என்று நினைக்கிற இளைஞர்களும்இங்கே வந்து மணிக்கணக்காக நேரம் செலவிடுவது உண்டு.

ஆனால் க்ளிலோடில் அதிகம் தென்படுகிறவர்கள் யார் என்று பார்த்தால் முன்னாள் இன்னாள் மொசாட் அதிகாரிகள் தான் இவர்களில் பலர் தங்களுடைய நெருங்கிய சிநேகிதர்களை சக ஊழியர்களைப் பறிகொடுத்தவர்கள்.

ஒரு நிமிடம் உங்களை ஒரு மொசாட் அதிகாரியாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள் உங்களுக்கு கீழே பல திறமை சாலி இளைஞர்கள் பணிபுரிகிறார்கள். ஒரு முக்கியமான ஆனால் ஆபத்தான வேலைக்கு அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கிறீர்கள்.

அதன்பிறகு அவர்கள் அதை ஒழுங்காகச் செய்து முடித்து விட்டுத் திரும்பிவந்தால் சந்தோஷம் எல்லோரும் கை தட்டிப் பார்ட்டி கொண்டாடலாம். ஒருவேளை அவர்களில் சிலர் மாட்டிக் கொண்டு விட்டால்? மரணமடைந்துவிட்டால்? அதுஆபத்தானவேலை என்று தெரிந்தும்கூட அவர்களை அனுப்பிவைத்தது நீங்கள் தானே? அந்தக் குற்றவுணர்ச்சி உங்களைச் சும்மாவிடுமா?

கொஞ்சம் கஷ்டம் தான் ஆனால் எப்போதும் எதிரிகளுக்கு மத்தியிலேயே வாழ்ந்து பழகிவிட்ட இஸ்ரேலியர்கள் இதை வேறுவிதமாகப் பார்க்கிறார்கள் என்ன செய்வது? நாட்டின் பாதுகாப்பு முக்கியம். அதற்காகச் சிலர் தங்களுடைய உயிர்களைத் தியாகம் செய்யவேண்டியிருக்கிறது. அதைத் தவிர்க்கமுடியாது இதுதான் எதார்த்தம் என்று ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்!

இந்தஎண்ணத்தோடு தான் மொசாட் அதிகாரிகள் அந்த நினைவுச் சின்னத்திலிருந்து வெளியே வருகிறார்கள். அடுத்த வேலையை நோக்கி நடக்கிறார்கள் எப்பேர்ப்பட்ட ஆபத்தும் அவர்களுடைய வேகத்துக்குத் தடை போட முடியாது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஐ.நா கூட்டத்...

ஜெனிவாவில் இன்று ஜெனிவா நேரப்படி காலை 10.00 மணிக்கு (இலங்கை நேரப்படி பி.ப 1.30) ஆரம்பமாகவிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரின் முதலாம் நாள் அமர்வில் உலகளாவிய மனித உரிமைகள் நிலைவரம் குறித்து ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் உரையாற்றுவார்.

அதனைத்தொடர்ந்து மியன்மார் தொடர்பான உயர்ஸ்தானிகரின் அறிக்கை மற்றும் சுயாதீன விசாரணைப்பொறிமுறை குறித்த விவாதம் நடைபெறும். அதன் பின்னர் ஜெனிவா நேரப்படி நண்பகல் 12.15 மணிக்கு (இலங்கை நேரப்படி பி.ப 3.45) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை மீதான விவாதம் இடம்பெறும்.

இலங்கையில் ஆட்சிபீடமேறிய அரசாங்கங்கள் சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு ஏற்றவாறு அமையக்கூடிய சுயாதீனமானதும் நியாயமானதும் செயற்திறன் மிக்கதுமான பொறுப்புக்கூறல் செயன்முறையை ஸ்தாபிப்பதற்குத் தற்போதுவரை தவறியிருக்கின்றன.

இந்நிலையில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பவற்றை உறுதிப்படுத்துவதற்கு பாதிக்கப்பட்ட தரப்பினரதும் சர்வதேச சமூகத்தினதும் நம்பிக்கையை வென்றெடுத்த முன்னேற்றகரமானதொரு செயன்முறையை நோக்கி அரசாங்கம் நகர வேண்டும் என உயர்ஸ்தானிகர் அலுவலக அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்வறிக்கை தொடர்பில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் தமது கருத்துக்களை முன்வைத்து உரையாற்றியதன் பின்னர் இலங்கை சார்பில் கூட்டத்தொடரில் பங்கேற்கவுள்ள வெளிவிவகார வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் அரசாங்கத்தின் நிலைப்பாட்டையும் தாம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளையும் தெளிவுபடுத்திப் பதிலளிப்பார்.

இது இவ்வாறிருக்க இம்முறை இலங்கை தொடர்பில் பிரிட்டன் தலைமையிலான உறுப்புநாடுகளினால் பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய பிரேரணை குறித்த உத்தியோகபூர்வமற்ற கலந்துரையாடல்கள் இம்மாதம் 15ஆம் திகதியின் பின்னர் ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளன. (ம-7)

## 21 நாட்களான...

குழந்தை ஒன்று நேற்று மரணமடைந்துள்ளது.

சுன்னாகம் தெற்குப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (07) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த ஜசிந்தன் லாவண்யா தம்பதிகளின் 21 நாளேயான ஆண் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை (07) மதியம் தாய்ப்பால் ஊட்டி விட்டு குழந்தையை தாயார் படுக்க வைத்ததாகவும் பின்னர் குழந்தையை எழுப்பிய போது வாந்தி எடுத்த நிலையில் அசைவற்றுக் காணப்பட்டதை அடுத்து தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது குழந்தை ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)

## ஜெனிவா பயண...

நேற்று ஞாயிற்றுக்கிழமை (07) காலை சுமார் 06.45 மணிக்கு ஜெனிவாவிற்குப் பயணமானார்.

இன்று திங்கட்கிழமை (08) ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் கலந்து கொள்வதற்காக அவர் ஜெனிவா பயணமானார்.

இலங்கை அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர் விஜித ஹேரத் சிறப்பு அறிக்கை ஒன்றை வெளியிடவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, ஜெனிவாவில் பல உயர்மட்ட இராஜதந்திரிகளுடன் அமைச்சர் விஜித ஹேரத் இருதரப்புக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க் மற்றும் அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கிடையேயான சிறப்பு சந்திப்பொன்றும் நடைபெறவுள்ளது. (ம-7)

## தையிட்டி விகா...

யாழ்ப்பாணம் வலி.வடக்கு - தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரையை அகற்றி பொது மக்களின் காணிகளை விடுவிக்க வலியுறுத்தி நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வெசாக் தினத்தை முன்னிட்டு விகாரையில் விசேட பூசைகள் நடைபெற்ற நிலையில் நேற்று முன்தினம் மாலை முதல் நேற்று மாலை வரை குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், பொ.ஐங்கரநேசன், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், காணி உரிமையாளர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், பொது மக்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (ம-7,250)

## கிரு...

மரணம்தான் ஒரு அங்கத்தை தொட்டுத் தந்தது என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

செம்மணியில் நேற்று (07) நடைபெற்ற கிருசாந்தியின் 29ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்தமண்ணிலே இப் பொழுதும் பொருளாக இருக்கின்ற நூற்றுக்கணக்கான எங்களுடைய சகோதரர்களின் எலும்புக் கூடுகளின் சாட்சியாக இந்த மண்ணிலே ஒன்றுகூடியிருப்பது காலத்தின் கடமையாகும்.

இந்த மண்ணிலே சிங்கள பௌத்த பேரினவாதிகளால் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு கிருசாந்தியினுடைய மரணம்தான் ஒரு அங்கத்தைத் தொட்டுத் தந்தது.

இன்றும் கூட கண்டெடுக்கப்படுகின்ற பல நூற்றுக்கணக்கான எலும்புக்கூடுகள் இருக்க வைத்த நிலையில் அல்லது கட்டிப்பிடித்த நிலையில் எந்தவொரு அடையாளமும் இல்லாமல் அவர்களுடைய இதயப் பகுதிகள், மண்டையோட்டுப் பகுதிகள் அடித்து நொருக்கப்பட்ட எலும்புக் கூடுகளை இந்த இடத்தில் பார்க்கின்றோம்.

இந்த நிலையில் கிருசாந்தியினுடைய மரணமும் எங்களுக்கான விடுதலைப் பாதையில் ஒரு மைல்கல்.

கிருசாந்தியோடும் அவருக்கு முற்பாடும் பிற்பாடும் இந்த மண்ணிலே கொல்லப்பட்ட பலருடைய ஆத்மாக்கள் தமிழ்த் தேசிய விடுதலைப் பயணத்தில் ஒரு பாதையைத் திறக்கும்" என அவர் மேலும் தெரிவித்தார்.(ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.09.07
சீட்டிழுப்பு இலக்கம் 5945
U 5 5 8 2 4 2
அத சம்பத
U 8 2 4 2
சீட்டிழுப்பு இலக்கம் 0520

சுப தவசக்
துலாம் 16 19 29 42

தன நிதானய
திகதி - 2025.09.07
சீட்டிழுப்பு இலக்கம் - 1975
Q 07 09 27 47 Q

மெகா பவர்
திகதி 07/09/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2293
G 17 20 46 58 70

ஜய
திகதி 2025.09.07
சீட்டிழுப்பு இலக்கம் 0213
D 3 6 8 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4187
சீட்டிழுப்பு திகதி 07.09.2025
J 12 26 51 80
J

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.09.07
சீட்டிழுப்பு இலக்கம் 1254
விருச்சிகம் 18 21 25 26 விருச்சிகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
07.09.2025 வெற்றி வாரம் 0653
ஆங்கில எழுத்து S
7 1 1 5 8 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23.701.953.60

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2919
சீட்டிழுப்பு திகதி 2025.09.07 தினம் ஞாயிற்றுக்கிழமை
11 12 48 54 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,841,777.60

சனிதா
திகதி 07.09.2025 வெற்றி வாரம் 5080
28 41 42 79 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,668,034.00

சசிரி
0765
07.09.2025 ஞாயிற்றுக்கிழமை
01 06 11
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

சீட்டிழுப்பு வாரம் 4631
சீட்டிழுப்பு திகதி 07.09.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
06 10 31 54 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,519,730.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 14 12 25 41 58
2095
07.09.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.592,484,108.00

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2745
சீட்டிழுப்பு திகதி : 2025.09.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.90,105,565.60
07 16 46 53 G


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3827)

076 825 7716 (ஆகாஸ்)

## மாப்பிள்ளை தேவை

01. சுழிபுரம், இந்து, 1997, சித்திரை, MBBS, MD, MBA, Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 38047
02. கோண்டாவில், இந்து, 1994, அவிட்டம், Grauated பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 53069
03. காரைநகர், இந்து, 1997, ஆயிலியம், Software Engineer (Uwa wellassa University) பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 52973
04. வேலணை, இந்து, 1983, MBBS, Doctor, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 53687
05. கச்சேரி, இந்து, 1979, பூராடம், UK Grauated, UKCitizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 50933
06. கந்தர்மடம், இந்து, 1989, ஆயிலியம், BSc, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 32157
07. தெல்லிப்பழை, இந்து, 1989, உத்திராடம், Optometrist, Divorce, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 30571
08. உடுப்பிட்டி, இந்து, 1994, கேட்டை, MSc, Mecanical Engineer, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 31484
09. புன்னாலைக்கட்டுவன், இந்து, 1990, புனர்பூசம், Bussiness and Finance UK degree, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 37878
10. கோப்பாய், இந்து, 1997, அஸ்வினி, MSc, Biomedical Junior Scientist, UK Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 35467

(5346)

நீங்களாகவே எமது Website www.thaalee.com இல் உங்களுக்கு பொருத்தமானவர்களைத் தெரிவு செய்துகொள்ளலாம்.

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## எல்லை...

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை குறித்த அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கைக்காக, அனுப்பப்பட்டுள்ள எழுத்துபூர்வபதிலில் அரசாங்கம் இதனைத் தெரிவித்துள்ளது.

13வது திருத்தத்தின் கீழ் மாகாண சபைத் தேர்தல்கள் 2014 முதல் நடத்தப்படவில்லை என்ற மனித உரிமைகள் ஆணையாளரின் கூற்றுக்குப் பதிலாகவே அரசாங்கம் இந்தப் பதிலை வழங்கியுள்ளது.

முன்னதாக 2025ஆம் ஆண்டில் அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தல் களை நடத்தியது.

இந்தநிலையில் எல்லை நிர்ணய செயல்முறை முடிந்ததும் மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் தமது பதில் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-3825)

UK 11Kg - 1390/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- Australia 11Kg - 2150/- Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Main Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237

உடனடி வேலைவாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Main Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-3825)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

SPACE FESTIVAL 2025
12 SEP
2025 FRIDAY 09.00 AM
VENUE : SLIIT NORTHERN UNI, JAFFNA



(C-3826)

மாணவர்களுக்கும் பொதுமக்களுக்குமான விண்வெளி விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களின் சங்கமம்

SPACE FEST 2025

SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna

021 7534 807
northernuni.lk apply@northernuni.com

## வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Resturant ற்கு உணவு பரிமாறுபவர்கள், சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் மற்றும் வரவேற்பாளர்கள் தேவை. (5330)

076 830 3931

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிறுவனத்துக்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் வேலை ஆட்கள் உடன் தேவை.

1. விற்பனையாளர்
2. பில் கிளாக் (சிட்டை எழுதுனர்)
3. பைக்கிங் செய்பவர்
4. வரவேற்பாளர்

(5347)

தொடர்புக்கு :
074 138 8156
076 028 9835, 077 590 6482


# 20ஆம் ஆண்டு நினைவஞ்சலி

நெடுந்தீவு கிழக்கு - விஸ்வலிங்கம் பேக்கரி உரிமையாளரும்
மாவலித்துறை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி (பிடாரி) அம்மன் ஆலய
தர்மகர்த்தாவும் ஆகிய

அமரர்
## கணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம்

மலர்ந்தது : 18.03.1932
திதி : 08.09.2025 (பிரதமை)
உதிர்ந்தது : 20.08.2005





கண்ணுக்குள் ஒளியாய்
நெஞ்சத்தின் நினைவாய்
நிலையாய் என்றும் எங்களோடு.
எங்களின் இறைவனாய் - என்றும்
எங்களை வழிநடத்த
வணங்குகின்றோம்.

(C-3824)

நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org